ஸ்ரீ:

# லோக மித்ரன்.

## ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்".

வா. 1. ஜனவரி 1913. ந. 1.

உள்ளுறை.


| | |
|---|---|
| காப்பு ... ... ... | 1. |
| இந்தியாவின் பலசாஸ்திரப் பயிற்சி | 2. |
| நமது நாட்டின் நிலைமை ... | 7. |
| ஸ்ரீ நாமகிரி ஸ்தலபுராணம் ... | 9. |
| பாகவத உபந்யாஸம் ... ... | |
| ஜீவோஜ்ஜீவனம் (ஓர் நாடகம்) ... | |
| மெய்யுணர்தல்... ... ... | |
| பெண்கல்வி ... ... | 3[illegible] |
| நன்றியற்ற எஜமானன் (ஓர் கதை) | 40. |
| பெண்கள் பக்கம்—வேதவதி ... | 46. |
| வர்த்தமானங்கள் ... ... | 52. |
| சிறுவர்கள் பக்கம்—விநோதக்கணக்குகள். | 56. |


பத்திராசிரியர், M. V. கோவிந்தராஜய்யங்கார்.

நாமக்கல்.
யூனியன் அச்சியந்திரசாலை.
வருஷம் 1-க்கு ரூ. 3] 1913. [தபாற்கூலி அணா 4.
தனிப்பிரதி ஒன்றுக்கு அணா 6.

ஸ்ரீ

# லோகமித்ரன்.

---

இப்பெயர்கொண்ட மாதாந்தத்தமிழ்ப்பத்திரிகையொன்று 1913 வரு ஜனவரி-மீ முதல் வெளியாகிவருகிறது. அதில் பிரசுரமாகும்

விஷயங்களாவன.

---

காலதேசவர்த்தமான விஷயங்கள்.
இதிஹாஸ புராணவாராய்ச்சிகள்.
ரஸாயன முதலிய சாஸ்திரவிஷயங்கள்.
நீதிவிஷயங்களும் அவற்றிற்கேற்ற கதைகளும்.
வேதாந்த ஸித்தாந்த விஷயங்கள்.
பலபாஷை மொழிபெயர்ப்பு விஷயங்கள்.
...தன நவீன நாடகங்கள்.
...ாதி வைத்திய விஷயங்கள்.
...றுவர் சிறுமியர்க்கேற்ற விஷயங்கள்.
இலக்கண இலக்கிய ஆராய்ச்சிகள்.

...ான்ற இன்னும் பலவிஷயங்களும் தகுந்த பண்டிதர்களால் எழுதப்பட்டுப் பிரசுரிக்கப்படும்.

பக்கங்கள் உடையதாக உயர்ந்த கடிதத்தில் பதிப்பிக்கப்படும்.

வருஷசந்தா தபால்கூலியுள்பட ரூபாய் 3—4—0.

விளம்பரவிஹிதம்.

பக்கம் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1—8—0

லோகமித்ரன் ஆபீஸ்.
நாமக்கல்.

M. V. கோவிந்தராஜய்யங்கார்,
எடிடர்.

# முகவுரை.

நாமக்கல்லில், மூன்று வருஷகாலங்களாக நடந்துவரும் பாகவதோபங்யாஸத்தை நான் ச்ரவணம் பண்ணிக்கொண்டுவருவதில், இந்த உபங்யாஸத்தை லோகோபகாரமாக அச்சிட்டுவெளிப்படுத்தவேண்டுமென்ற ஆசை ஜநித்தது. உபங்யாஸகர், ஸத்குணராயும் ப்ரதம வர்ணத்தில் ஜநித்து ப்ரதமாச்ரமத்திலேயே நின்ற நிஷ்களங்கராயும் ப்ரதிப்ரயோஜனத்தைக் கருதாது லோகோபகாரமாகவே உபங்யஸிப்பவராயும் இருப்பதால், அவருடைய சொந்த வார்த்தைகளையும் அபிப்ராயங்களையும் விட்டு ப்ரஸங்கத்தின் தாத்பர்யத்தை மாத்திரம் எழுதி வெளியிடுவது உசிதமல்லவென்று தியங்கினேன்.

அதற்கு அநுகுணமாக ஈச்வராநுக்ரஹத்தால் போல் N. K. கிருஷ்ணய்யர் என்னும் எனது நண்பர் ராமதாஸர் அவ்வுபங்யாஸங்களைத்தமது பரமாசாரியனுடைய அநுக்ரஹவிசேஷத்தால், நேரில் கேட்டவை கேட்டபடியே எழுதும்படியான யோக்யதைபெற்று, இரவில் த்யானத்தின்பிறகு ஒவ்வொரு நாளைய உபங்யாஸத்தையும் எழுதுவதாக வழக்கம்வைத்து இம்மூன்றுவருஷத்து உபங்யாஸங்களையும் முறையே எழுதிவைத்திருக்கிறார் என்றவிஷயம் காதுக்கெட்டியது. அப்படியே அவரிடத்தில் சென்று என்னபிப்ராயத்தைத்தெரிவிக்க, அவரும்ஒப்புக்கொண்டு புஸ்தகங்களையும் கொடுத்தார். இஃது இந்த லோகமித்ரனுக்கும் லோகத்தினுக்கும் மித்ரனாகும்படி இதனுள் ப்ரசுரிக்கத்துணிந்தேன்.

M. V. G.

ஸ்ரீ:

# பாகவத உபந்யாஸம்.

## விஞ்ஞாபநம்.

எளியேனுடைய பிதாமஹர், ப்ரம்மஸ்ரீ ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் என்பவர் ஸம்ஸ்க்ருதபண்டிதராகவிருந்து தர்மசாஸ்திரத்தை யறிந்து அநுஷ்டானமும் புரிந்து ஜனங்களுக்கு உத்தமவிஷயங்களைப் போதித்து அந்திமத்தில் துரீயாச்ரம ஸ்வீகாரஞ் செய்து கொண்டு ஆத்மாநந்தகுருஸ்வாமிகள் என்ற நாமதேயத்தையடைந்தவராய், ஆத்தூர் தாலூக்கா லக்ஷ்மணசமுத்திரத்தில், சுமார் இருபது வருஷங்கட்கு முன் ஸித்தியடைந்து தேஜோரூபமாய் விளங்கிக் கொண்டிருக்கிறார்.

அம்மஹான், ஏழைக்குச்சுமார் பதினாறு வருஷகாலங்களாக ஆத்மகுருவாக விளங்கிக்கொண்டு உத்தமமான விஷயங்களையெல்லாம் அநுக்ரஹம் செய்து வருகிறார். இப்போது சுமார் ஆறுமாதங்கட்கு முன்புதான், லக்ஷ்மணஸமுத்ரத்தில், அம்மஹான் ஸித்தியடைந்த ஸ்தானத்தில் ஒரு மடமும் சமீபத்தில் ஒரு மூர்த்தி கோயிலும் கட்டிவைக்கப்பட்டன.

நாமக்கல்லில், ஜீவகாருண்யத்தோடு ஜனங்களுக்குப் பலசமயங்களில் உத்தமமான விஷயங்களை ப்ரகாசம் செய்துகொண்டுவரும் ப்ரம்மஸ்ரீ ஸுப்ரமண்யசாஸ்திரிகள் உபந்யஸிக்கும் ஸ்ரீமத் பாகவதத்தை ச்ரவணம் செய்து கொண்டுவருகிறேன். ஆத்மகுருவின் ஆஞ்ஞையால், சாஸ்திரிகளைக்குருவாகத்தெரிந்து அன்றன்று கேட்டுவரும் உபந்யாஸங்களை மறுபடியும் மனனம் செய்து கொள்ளும் பொருட்டுப் புஸ்தகரூபமாய் எழுதிக்கொண்டுவருகிறேன்.

## ஜீவோஜ்ஜீவந நாடக பாத்திரங்கள்.

(கதாநாயகனும் பரிவாரங்களும்.)

———:o:———

ஜீவன்—கதாநாயகன்.
விஞ்ஞானசர்மா—ஜீவன்மந்திரி.
புண்டரீகபுரம்—ஜீவராஜன் கோட்டை.
மனது—கோட்டைவாயில்.
புத்தி—கதாநாயகி.
தாரணை—புத்தியின் தோழி.
ஞானசர்மா—தரகன். ஓர் அந்தணன்.
விசாரன்—காவற்சேவகன்.
பிராணன்—வாயிற்காப்போன்.
பக்தி—கார்யசித்திசெய்யும் ஒரு தெய்வப்பெண்.
ஸ்ம்ருதி, சிரத்தை—தோழிகள்.

### சத்துரு அரசனும் பரிவாரங்களும்.

க்ஷயன்—சத்துரு அரசன்.
பாண்டு—க்ஷயராஜன் மந்திரி.
காசன்—தோழன்.
சுவாசங்கள்—தோழனுக்கு ஐந்து சினேகிதர்கள்.
விஷூசிகா—அரசன் மனைவி.
காமிலா—மந்திரி மனைவி.
சர்த்தி, கண்டகண்டூதி—தோழனுக்குச் சோரநாயகிகள்.
விக்கல்கள்—சுவாசங்களின் ஐந்து மனைவிகள்.
களகண்டன்—காவலன்.
கர்ணமூலன்—சாரன்.
காமாதிகள்—கெடுமதி போதிப்போர்.

# ஜீவோஜ்ஜீவநம்.

## பிரஸ்தாவனா.

நாந்தி.

திருவினையும் மதியினையும் திகழ்வானப் பொருளினையும்
தெளிந்த கற்பத்
தருவினையுந் தானளித்து முலகினர்க்கே யமையாது
தயங்கு முந்நீர்ப்
பெருமிதத்தை முற்றுவிப்பா னமுதுநிறைக் கலசமொடு
பிறங்கு ஞான
உருவெடுத்த தந்வந்த்ரி உத்தமர்தந் தாளிணைகள்
உறுதி யாமே.

---

பலபிறவி யெடுத்தெடுத்துப் புல்லறிவு நீங்கியுயர்
பயன்கொள் பேற்றின்
நலமடைந்தும் நாற்பயனுண் முப்பயனே நணுகுவதால்
நான்காம் முத்தித்
தலமடைய விவ்வுடலே சாதனமா மவ்வுடலும்
சலியா தாக
நிலவுநதிச் சடையுடையார் நிமலகுரு வவர்தாள்கள்
நினைந்து வாழ்வாம்.

---

(என்று சொல்லிக்கொண்டு சூத்திரதாரர் பிரவேசிக்கிறார்.)

ஸூ—மைத்துன! இங்கு வா.

(பாரிபார்சுவகன் வருகிறான்.)

பாரி—பாவ! இதோ இருக்கிறேன்.

ஸ்ரீ:

# லோகமித்ரன்.

—:(‡):—

"அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ
டைந்துசால் பூன்றிய தூண்."

வா. 1 ஜனவரி 1913. ந. 1

## நட்பு.

ஸமானமான தர்மமும் பரஸ்பரம் செய்துகொள்ளும் உதவியுமே நட்பினுக்கு உயிர் நிலையாகும்.

ஒருவன் செய்த சிறிய உபகாரத்தினையும் பெரியதாகப் பாவித்தலே சிநேகத்தை வளர்க்கும் உணவு.

மற்றொருவனுடைய சுகதுக்கங்களில் அவனைப்போல் அனுபவித்தும், அவனுக்குக்கெடுமதி தோன்றினால் நீதியைப் போதித்தும், அவனுக்குத் தீங்கு நேர்ந்தால் தான் ஆயத்தமாயிருந்து அவனைக்காத்தும், அவனுக்காகத் தைரியமாய்த் தான் உழைத்தும், அவனாலும் மற்றவராலும் தனக்கு வரும் அவமானங்களைத் தான் கோபிக்காது ஏற்றுக்கொண்டும் இருப்பவன் உண்மையான தோழனாவான்.

உன் பகைவர் யார்? உனக்கு ஒருகாலத்தில் நேசமாக இருந்தவர்களே அவர். ஆதலால், ஒருவரை நட்புக்கொள்ளுங்காலத்தில் அவரது குணங்களையும் நடத்தைகளையும் ஆராய்ந்த பிறகே சிநேகங்கொள்வது நலமாகும்.

அப்படி நேசங்கொண்டபிறகு அவரது எளிமையையும், துக்கத்தையும், குற்றங்களையும் கவனியாதே.

பெரியவர், நட்பினரின்பொருட்டு உடல் பொருள் ஆவி மூன்றையும் சமயம் நேர்ந்த காலத்தில் ஏற்றபடி கொடுப்பார்.

# இந்தியாவின்
# பல சாஸ்திரப் பயிற்சி.

இக்காலத்தில், உலகமுற்றும் பாவியிருக்கும் எவ்விதத் தொழிலையும் முதன்முதன் காட்டிக்கொடுத்தது இந்தியாவே.

இப்பொழுது உலகத்தில் தங்களது விடாமுயற்சியாலும் சூழ்ச்சியாலும் பலத்தாலும் நாகரிகத்தாலும் மேம்பாட்டாலும் தெளிவாலும் உயர்ந்திருப்பவரென்று புகழ்ந்து சொல்லப்படுகிற ஐரோப்பியரெல்லாரும் பேரின்ப மின்னதென்று தெரியாதவராக விருந்த காலத்தும், இந்தியரே அவ்விதவின்ப மின்னதென்று அறிந்தவர்களாய்த் துவைதம் அத்வைதம், நிலையற்றது நிலையுற்றது, அழிவது அழியாதது, சிற்றின்பம் பேரின்பம், ஆத்மா பரமாத்மா, உலகம் உயிர், ஆஸ்திகம் நாஸ்திகம், பூதங்கள், உலகசிருஷ்டி, தேகசிருஷ்டி, மனது சிருஷ்டி இவற்றின் விவரங்களை ஐயமில்லாமல் போதிப்பவராகவும் இருந்தனர். மகாஅலெக்சாந்தர் இந்தியாவிற்கு வந்திருந்தபோது இந்துக்களின் சாஸ்திரப்பயிற்சியின் தேர்ச்சியை அறிந்து சில இந்து தத்வதரிசிகளைத் தமது தேசத்திற்கு அழைத்துக்கொண்டு போனதாக நாம் படிக்கிறோம். அவர்களில் தலைவராயிருந்த சிரவணாசாரியர் என்பவர் கிரேக்கர் நாட்டிலேயே இறந்துவிட்டதாகவும் தெரிகிறோம்.

ஐரோப்பியர் இருப்புப்பாதைகளையும் தந்திமார்க்கங்களையும் ஆகாயக்கப்பல்களையும் இவைபோன்ற இன்னும் பலவற்றையும் விருத்திசெய்துக் காட்டினவராயினும், இன்னும் இந்தியாவின் ஸங்கீதப்பயிற்சியின் ஸமானநிலைக்கு வந்து தேறினவராகவில்லை. இத்தேர்ச்சியை இந்தியர்கள் மிகப்பழையகாலத்திலேயே அடைந்தனர் என்பதற்கு வேதமும் ஸரஸ்வதிதேவியும் சாக்ஷிகளாகவிருக்

கின்றனர். பெயர்பெற்ற ஹோமர் (Homer) தமது இல்லியதைப் (Illiad) பாடுவதற்கு முன்னமே இந்தியர் வேதங்களேயும் புராணங்களேயும் இன்னும் பல சாஸ்திரங்களேயும் எழுதியுள்ளார்கள்.

பாஷாபிவிருத்தியிலோ, இந்தியாவே தலைமையாக நிற்கின்றது. ஸம்ஸ்க்ருதத்தில் மாத்திரமன்றி இதரபாஷைகளிலும் நிறைந்த இலக்கணங்களுடையதாக இருக்கின்றது. ஒவ்வொரு பாஷைக்கேயுரிய அரசர் தலைமைபெற்றிருந்தபோது மற்றப்பாஷைகள் அவருடைய திரவிசாரியாத குறைவால் தாழ்த்தப்பட்டிருக்கலாம். இஃது அவரது தாழ்ச்சியேயன்றி பாஷையின் தாழ்ச்சியன்று. தர்மசாஸ்திரங்களும் (Ethics) மானஸ சாஸ்திரங்களுமே (Metaphisics) ரிஷிகளுக்கும் படித்தவர்களுக்கும் பொழுதுபோக்கும் பொருள்களாகவிருந்தன.

ரஸாயன சாஸ்திரம் (Chemistry) நன்ருக விருத்தியடைந்திருந்தது. இதனை ராய் ப்ரபுல்ல சந்திரர் (Rai Prafulla Chandra) எழுதியுள்ள புஸ்தகங்கள் நன்ருய் விவரித்துச்சொல்லும். அவர்கள் பௌதிகப்பொருள்களைப் பரீக்ஷித்தது தாழ்வுமில்லை ரஹஸ்யமுமில்லை. யாவற்றையும் திரவப்பொருளாக்குவதிலும் வன்மை பெற்றனர்.

கணிதசாஸ்திரங்களில் இந்தியரே சிறந்தவர். எண்கணிதம், பீஜகணிதம், பூமிகணிதம் (Geometry) இவற்றில் மிகத்தேர்ச்சி பெற்ற லீலாவதி என்று பெயருடைய பாஸ்கராசாரியருடைய குமாரத்தியான ஸ்ரீமதியே இன்னும் புகழுடம்போடிருந்து சாக்ஷி சொல்கிருள். தசாம்சகணிதத்தில் (Decimals) தேர்ந்த இந்தியரிடமிருந்தே அரபியர் அதனைக்கற்றுக்கொண்டனர். நக்ஷத்திரகணிதமென்கிற வானசாஸ்திரத்திலும் இந்தியர் தேர்ச்சியடைந்திருந்து கிரஹங்களின் ஆகர்ஷணசக்திகளேயும் பூகோளசுழற்சியையும் ஸூக்ஷ்மமான நக்ஷத்திரங்களின் இருப்பையும் தூமகேது வுண்மையையும் கிரஹணவிஷயங்களேயும் ஸர் ஐஸக் ந்யூடன் (Sir Isac Newton) காலிலியோ (Galileo) என்னும் இவர் தெரிந்துகொள்வ

தற்குப்பல்லாண்டுகளுக்கு முன்னமே செவ்வையாக அறிந்திருக்கிறார்கள்.

யாப்பிலும் (Prosody) அணியிலும் (Rhetoric) அதுபோலவே பெயர் பெற்றவர். இங்கிலீஷில் யாப்பிற்சிறந்த சாஸர் (Chaucer) என்பவருக்கு முன்னமே இந்தியா, ஸம்ஸ்க்ருதத்தில் மாத்திரமன்றி இதர பாஷைகளிலும் அவ்வப்பாஷைகட்கேற்ற புலவர்களைப் பெற்றிருந்து அவரால் அவ்வவ்வலங்கார சாஸ்திரங்களுக்கேற்றபடி இனிமையும் ஓசையும் பொருளும் அழகொடு நிறைந்த பலவிலக்கியப் புஸ்தகங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

வியாபாரமோ, தகுந்த விருத்தியான நிலையில் இருந்தபோது அராபியரால் பலபாகங்கட்கும் இந்திய கைத்தொழிற்பொருள் கொண்டு போகப்பட்டிருப்பதை முறையிடுகிறது. கி. பி. 1400-ல் கோலம்பஸ் (Columbus) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்கா கண்டத்திற்கும் அப்பொருள்கள் சென்றிருக்குமோவென்று சந்தேகப்படவேண்டாம். இப்போது பழம்பொருள் ஆராய்ச் செய்பவரும் (Antiquarians) இந்தியரின் பாதாளமென்பது அமெரிக்கா கண்டந்தானென்ற உறுதிக்கு வந்திருக்கிறார்கள். இந்தப் பாதாளவுலகினொடு இந்துக்கள் அதிகப்பழக்கம் வைத்துக்கொண்டிருந்தார்கள் என்பதே அந்த ஸந்தேகத்தை ஒழிக்கும். நெசவுத் தொழில் இந்தியர்க்கு மிகவும் கைவந்தது. அதி சூக்ஷ்மமாகவும் நூலிழைப்பர். டேக்கா மசூலிபட்டணம் இவற்றின் துணி இதற்கு முன்வந்திருக்கின்றன. இத்தொழிலில் இந்தியா முதன்மை பெற்றிருந்ததுமன்றித் தற்காலத்த இயந்திரம் (Mill) களைத்தனது பெருந்தன்மையான கைத்தறி (Hand-looms) கட்கு முன்னே வெட்கிப்போம்படியே செய்துகொண்டிருக்கிறது. வெள்ளி பொன் சரிகை வேலையைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ?

கொத்துவேலை (Sculpture) சித்திரவித்தைகளின் தேர்ச்சியைப்பற்றிச்சொல்ல இந்தியரது கோவில்களும் கட்டிடங்களுமே

யல்லாமல், வேடிக்கைபார்க்க வந்துபோகும் ஐரோப்பியரது டைரிகளும் (Diaries) பொய்க்காது முன்வந்து நிற்கின்றனவே. ஆபூ (Abu) மலைகளின் கோவில்களைப் பார்த்திருப்பவர்க்கு இஃது ஒரு ஆச்சர்யமல்லவென்றேசொல்லலாம். சித்திரவித்தையைப்பற்றி நமது A. K. குமாரசாமி அவர்களின் அருமையான புஸ்தகங்கள் அனுவும்விடாது நாடோறும் தெரிவித்துக்கொண்டிருக்கின்றன. சிற்பவேலை இந்தியரை விட்டு வெளியே போகவேயில்லை. டாஜ்மஹால் குடும்பினர், ஷா அலம் கோரி, அஜண்டா எல்லோரா குகைகள், ஆபுமலைக்கோவில்கள், ஸ்ரீரங்கம் தஞ்சாவூர்க்கோவில்கள் இவை போன்றனவேயன்றி, டாக்டர் கன்னிங் (Dr. Cunning) துரையவர்களது பெரும்புஸ்தகங்களும் உயிர்த்திருக்கும் வரையில் இந்த விஷயத்தில் ஒருவரும் ஸந்தேஹங் கொள்ளாரென்று உறுதியாய் எண்ணுகிறோம். மனு, யாஞ்ஞவல்கியர், பராசரர் இவர்களின் தர்மசாஸ்திரப் புஸ்தகங்களையேனும் பார்த்திருப்பவர் இந்தியரின் கூட்டுறவு, பரோபகாரம், நாகரிகம், நீதியுணர்ச்சி முதலியவற்றைப்பற்றி மிகுந்த ஆச்சரியமும் ஆனந்தமுமடைவர் என்பதற்கு ஸந்தேஹமேயில்லை.

இவற்றினால் இந்தியரின்மேல் குற்றஞ்சுமத்தோம், எங்கே ஐயா சரித்திரவைப்பும் (History) அதன்பயிற்சியும் என்பீர்களோ? ஜேம்ஸ் டாட் (James Todd) என்பவர் எழுதியுள்ள புஸ்தகத் தொகைகள் உங்கள் ஸந்தேஹத்தையொழித்து, இந்தியரின் தலைமேல் நீங்கள் ஏற்றிவைத்திருந்த பெருஞ்சுமையைக் கீழே தள்ளியிருக்கின்றன. அப்படிச் செய்ததேயன்றி அப்புஸ்தகங்கள், இந்தியர்கள் தங்கள் தேசசரித்திரங்களைக் காப்பாற்றி வைத்திருக்கும் முறையைப்பார்த்து ஆச்சரியமும் கொள்கின்றன. எத்தனை சரித்திரவாசியர்களுடைய வம்சங்கள் அவ்வக்காலங்களில் இத்தொழிற்கென்றே அரசரால் விடப்பட்டிருக்கும் ஜாகீர்களால் பிழைத்திருக்கின்றன.

வில்லாண்மை (Archery) அல்லது தனுவித்தையைப்பற்றித் தெரியாதவர் தெரியாதவரே. அவர் உலகத்திற்குக் காரணமான

பஞ்சபூதங்களையே தமக்குத்தொழிலாளிகளாகக்கொண்டனரென்று சொல்லப்படுகின்றார்கள். பாம்புபோன்ற பாணங்களை யெறிந்து மழையையும் வருவித்துள்ளார்.

அறிவுக்குமெட்டாத அந்தரங்கசாஸ்திரங்களில், (Mysterious sciences) இந்தியரைப் பின்பற்றியே இதரர் துரீயதர்சனம் (Mesmerism) முதலான சாஸ்திரங்களைப்பயின்று வருகிறார்களென்று சொல்ல நாம் நாணங்கொள்ளோம். இந்தியர் தமது சாஸ்திரங்களை யோகத்தில் தேர்ந்தவராலேயே அடைந்திருக்கின்றனர். வேளாண்மையில் இந்தியா மேம்பாடுற்றதன்றோ? ஜனத்தொகையில் நூற்றுக்கு எண்பத்துநான்கு இன்றும் உழுது பயிரிட்டன்றோ ஜீவிக்கின்றன.

கப்பற்றொழிலில் இற்றைக்கு மூந்நூறு வருஷங்கட்கு முன் போனிஷியர் (Phoenicians) இந்தியக்கப்பலையும் கப்பற்றொழிலையும் கண்டு ஆச்சரியப்பட்டிருக்கும்படி செய்திருக்கின்றனர்.

தாவரம்(Botany) பிராணிநூல்(Zoology) இவற்றிலும் அவர்கள் தளராதிருந்ததை இந்திய வைத்திய முறைகள் இன்னும் புலம்பிக்கொண்டிருக்கின்றன.

மற்றொருமுறை இப்பத்திரிகையில் ஆயுர்வேதத்தைப்பற்றிச் சொல்லும்போது இவ்விஷயங்கள் விவரித்துப்பேசப்படும். இதற்கென்றெடுத்துக்கொண்ட பக்கங்கள் முடிந்துவருவதால் இந்த விஷயத்தைப்பற்றிய விவரம் ஒருவாறாக முடிக்கப்படுகிறது.

"உடையவன் கண்ணுடாப்பயிர் நாசமடை" வதுபோல, இத்தொழில்கள் கெடாமலிருக்கும்படி இந்தியர் இப்போது செய்யும் முயற்சியைக்காட்டிலும் அதிகங்காட்டி ஒவ்வொன்றையும் பயிற்சியில் முன்னிற்கும்படி செய்யும்வண்ணம் எல்லாம்வல்ல இறைவன் அருள் புரிவாராக.

பத்திராசிரியர்.

# நமது நாட்டின் நிலைமை.

:(-):

பொதுவாக ஒரு நாடு செல்வம் தழைத்தோங்க நான்குவித காரணங்கள் உண்டு. அவை விவசாயம் வியாபாரம் கைத்தொழில் ராஜாங்கம் என்பன. இவைகளில் ஏதேனும் ஒன்று சிறிது குறைவு பட்டிருப்பினும் செல்வக்குறைவுற்ற நாடாகவே கருதல்வேண்டும். மேற்கூறிய நான்கையுங்கொண்டு நமது நாட்டின் தற்கால நிலைமையைச்சற்று கவனிப்போமானால் ஒன்றுவது தன் பூர்த்தியான நிலையடைந்ததாகக்கூற இடமில்லையென்றால் நம்நாட்டின் செல்வவளம் சொல்லாமலே விளங்கும். மேற்கூறிய குறைவுபாடே நம்மவர்களின் வறுமைக்கும் ஹீனஸ்திதிக்கும் காரணம்.

இந்நான்கில் முதல் மூன்றுமாவது தம் உன்னதநிலைமைகளை அடைந்திருப்பின் நமக்கு ஓர்வித ஆறுதலுக்கு இடமுண்டு. தற்காலம் அவ்வித ஆறுதலடைவதும் கஷ்டசாத்தியமாயிருக்கிறது. ஆயினும் சாத்தியமே. அப்படியாயின் நாம் செய்யவேண்டியது என்ன ? நம் குறைவுபாடுகள் இவையென்பதைச் செவ்வையாய் உணர்ந்து அவைளுக்குத்தக்க பரிகாரங்கள் செய்து நிவர்த்திசெய்து கொள்ளவேண்டியது அவசியம். முதலில் நம் குறைவுபாடுகள் எவை என்பதை முறையே ஒன்றன்பின் ஒன்றாய் விவகரிப்போம்.

விவசாயம்:—நமது நாட்டில் விவசாயத்தொழில் செய்யும் ஜனங்களில் பெரும்பான்மையோர் நம்மவர்களே. அவர்கள் செய்யும் விவசாயத்தொழில் லாபகரமானதா ? அன்றி வேறுவிதமானதா? என்றால், "உழுதவன் கணக்குப்பார்த்தால் உழவுகோலும் மிச்சமில்லை" என்ற பழமொழி நம் நாட்டுத்தற்கால விவசாயிகள் ஒவ்வொருவர் வாயினின்றும் கேட்கலாம்; எனின், விவரித்துக்கூற வேண்டியதனவசியம். அப்படி லாபமில்லாத தொழிலை முயற்சியாதிருக்கமுடியுமா? என்றால், அதுவும் முடியாது. நூற்றுக்கு நம் நாட்டில் எண்பது பேர் விவசாயிகளாகவிருக்கிறார்கள். அப்படியிருப்பதிலும் முக்கால்பங்குக்கு மேல் வயிறுறச்சோறும் உடல் மூட

ஆடையுமில்லாது, உடலையும் உயிரையும் மட்டும் காப்பாற்றிக்கொண்டால் போதும் என்ற நிலைமையில் இருக்கிறார்கள். "விழலுக்கிறைத்த நீராய்" இப்படியிருப்பதற்குக்காரணம் பூமியின் வளக்குறைவா? நம் ஜனங்களின் ஊக்கக்குறைவா? விவசாய சாஸ்திரஞானக்குறைவா? அன்றி விவசாய சாஸ்திரத்திற்கூறியபடி நடவடிக்கையிற் காட்டப்போதிய செல்வக்குறைவா? என்று ஆராயப்புகின் முற்கூறியவிரண்டும் நிரம்பப்பெற்றிருக்கின்றோம் என்றும் பின்னைய இரண்டுமட்டும் பெருங்குறைவா யிருக்கின்றனவென்றுமுணர்ந்துகொள்வோம். ஜப்பான், அமெரிக்கா போன்ற அந்நிய நாடுகளில் ஒரு ஏக்ரா பூமியுடையவன் பதினாயிரரூபாய் ஸ்திதிவந்தனாகக் கருதப்படுகிறான். இதன் காரணம் பூமியின் இயற்கைவளமென்று பலர் கருதக்கூடும். ஆனால் அவ்வளவும் செயற்கைவளமேயன்றி இயற்கைவளமல்லவென்பதை மட்டும் நாம் அவர்கள் மனதில் ஊன்றிய பதிவுசெய்யவேண்டும். சில நூற்றாண்டுகளுக்கு முன் அந்நாடுகளிலும் வெறும் பொட்டல் நிலங்கள் பெரும்பான்மையான பாகமிருந்ததாகவும், நவீன விவசாய சாஸ்திர நடவடிக்கைகளால் மேம்பாடான வளமுள்ள நிலங்களாய்ச் செய்யப்பட்டிருப்பதாகவும் சரித்திர ஆராய்ச்சியால் தெளிகிறோம். நமது நாட்டில் நவீன விவசாயஞானம் என்பது பெருங்குறைவு. பெற்ற சிலரும் ஆரம்பத்தில் முட்டுவளிச் செலவுக்குப்பொருளில்லாமல் திண்டாடுகிறார்கள். சிறிது செல்வமுடையோர் நவீனமுறையைக் கையாளக்கருதி தங்களிடமுள்ள சிறுசெல்வமுற்று மிழந்து கடன்காரராய்த்தெருவில் தயங்குகிறார்கள். பெருஞ்செல்வராயிருக்கும் ஒரு பகுப்பார் அநேகமாய் நவீனஞானம் குறைவுபட்டவர்களாகவே காணப்படுகிறார்கள். சிறிது அடைந்திருப்பினும் நம் துணிவு லாபத்தைக் கொடாமற்போனால் என்ன செய்வது என்று ஐயப்பாடுற்று செட்டிமார்களிடத்தில் வட்டிக்குக்கொடுத்தால் தட்டுதலின்றி முதலுக்கு மோசமில்லாமல் லாபங்கிடைக்குமென்ற ஊன்றிய நம்பிக்கைக்குள்ளாகிவிடுகிறார்கள்.

தொடரும்.

M. C. Sabhapathi.

ஸ்ரீ:

ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்ஹ ஸ்வாமிநே நம:

# ஸ்ரீ நாமகிரி ஸ்தலபுராணம்.

## முதல் அத்யாயம்.

ஆதியில் தேவசபையில் ஸத்வகுண ஸ்ரேஷ்டர்களைப்பற்றி விசாரணையேற்பட்டபோது, பிரம்மா ருத்ரன் இவர்களைக்காட்டிலும் விஷ்ணுவே ஸுத்த ஸத்வகுண ஸஹிதராய் இருக்கிறாரென்று சில ரிஷிகள் சொன்னார்கள்.

இந்தவிஷயத்தில் தேவேந்திரனுக்கும் இதரதேவதைகளுக்கும் ஸம்சயந்தோன்றவே, இந்திரன் துர்வாஸ மஹரிஷியைப்பார்த்து, ஸ்வாமி! எங்களுக்குண்டாயிருக்கும் இந்த ஸந்தேஹத்தை யொழித்து, எங்களை க்ருதார்த்தர்களாக்கவேண்டும் என்று கேட்டனன். அதற்கு துர்வாஸ மஹரிஷி பின்வருமாறு சொல்லுகிறார்.

'ஹே தேவேச! முன் ப்ரபஞ்சம் ஸ்ருஷ்டிக்கப்படுங்காலத்தில், மூலப்ரக்ருதியினுடைய காரணத்தினால் ஸாத்விகம் ராஜஸம் தாமஸம் என்னும் மூன்று குணங்களுமுடைய ஒரு அண்டம் தோன்றிற்று. அவற்றுள், ஸத்வகுணம் உள்ள பாகத்திலிருந்து விஷ்ணுவும் கௌரீதேவியும், ரஜோகுணம் உள்ள பாகத்திலிருந்து பிரம்மாவும் லக்ஷ்மீதேவியும், தமோகுணம் உள்ள பாகத்திலிருந்து ருத்திரரும் ஸரஸ்வதிதேவியும் தோன்றினார்கள்.

இப்படித்தோன்றிய மூன்று மூலதேவர்களும், அந்யோந்யராய் ஒருவருடைய ஸஹோதரியை ஒருவர் விவாஹம் செய்துகொண்டார்கள். அதாவது, பிரம்மாவினுடைய ஸஹோதரியான லக்ஷ்மியை விஷ்ணுதேவனும், விஷ்ணுவினுடைய ஸஹோதரியான கௌரியை ருத்திரதேவனும், ருத்திரனுடைய ஸஹோதரியான ஸரஸ்வதியை பிரம்மதேவனும் விவாஹம் செய்துகொண்டார்கள்.

அவருள் விஷ்ணுவுக்கு ஸாத்விககுணமும், லக்ஷ்மிக்கு ராஜஸகுணமும் அதிகப்பட்டு, இந்த இரண்டு பேருக்குள் ஒருவருக்காவது தாமஸகுணம் அதிகமாகத் தலையெடுப்பதற்கு இடமில்லாதிருந்ததால் இந்தச்சேர்க்கையே மேற்பட்டதாகவிருந்தது. அதனல் விஷ்ணுவானவர், உலககாரியத்தில் தீங்கில்லாமல் ப்ரவர்த்திக்கக்கூடிய ஸாத்விகராஜஸகுணப்ரதானமான சக்திகளைப்பெற்றவரானர். இதுபற்றியே, யாவரும் விஷ்ணுவை உத்தமகுணமுடையவர் என்று சொல்லுகிறர்கள். இதுவே உண்மை. இதில் எனக்கும் யாதொரு ஸம்சயமுமில்லை' என்றுதுர்வாஸமஹரிஷிஇந்திரனுக்குச்சொன்னர்.

அதற்கு இந்திரன், 'ஸ்வாமி! மஹரிஷே!! தம்முடைய வசனங்களையே ப்ரமாணங்களாகக்கொண்டிருக்கும் எனக்கு முன்தோன்றியிருந்த ஸந்தேஹம் ஒழிந்து போய்விட்டதென்றலும், தாம் சொல்லிக்கொண்டுவந்த குணங்களைப் பரிக்ஷை செய்விக்கவேண்டுமென்ற ஆசை யின்னும் இருந்துகொண்டிருக்கிறது. மூலபுருஷர்களான அந்தத்திரிமூர்த்திகளையும் பரிக்ஷைசெய்வதற்குத் தம்மையல்லாமல் தபோபலத்தையுடையார் ஒருவருமில்லையென்றே எனக்குத்தோன்றுகிறது' என்று சொன்னன்.

அதைச்செவியுற்ற மஹரிஷியானவர், அவ்விஷயத்தில் தமக்கு யாதொரு ஸந்தேஹமுமில்லாதிருந்தும், தேவேந்திரனுடையஸந்தேஹத்தை யொழித்து அவனை த்ருப்திசெய்விப்பதற்காக வெண்ணி, தமது தபோபலங்களையெல்லாம் ஒருமிக்கக்கூட்டி, உடனே ஒரே மனதுடையவராகப் புறப்பட்டார். முதலில், பிரம்மாவினுடைய ஆலயத்துக்குப்போய் தமது தபோபலத்துக்குப்பயந்து காவலர் வழிவிட உள்ளே நுழைந்து, அங்கே அவர் இருந்த இருப்பையும், தம்மை லக்ஷ்யம் செய்யாமல் கோபித்திருந்ததையும் கண்டு, அவ்விடம் விட்டுவிலகி, ருத்திரபகவானுடையஆலயத்திற்குப்போய், தமது சாபக்குறியால் நந்தி ப்ருங்கிகளைக்கடந்து, உள்ளேபுகுந்து, அங்கே அவருடைய அவேளையையும், தாமஸத்தோடிருந்து தம்மைக்கவனியாதிருந்ததையும் தெரிந்து, அங்கிருந்தும் புறப்பட்டு, விஷ்ணுவினுடைய ஆலயமாகிய வைகுண்டத்துக்குப்போனர்.

223530



மஹரிஷி, தமது கோபத்திற்குப் பயந்து தம்மைத்தடுக்காமல் நின்றுகொண்டிருந்த துவாரபாலகரையுங்கடந்து, ஆலயத்துக்குள் நுழைந்து, கமலையோடு அறிதுயிலில் இருந்த கமலக்கண்ணனைக்கண்டு, கடுங்கோபங்கொண்டவர்போலத் தமது காலால் விஷ்ணுவினுடைய மார்பில் உதைத்தார்.

இதரமான இரண்டிடங்கட்கும் போய்த்தாம் காத்திருந்தும், அந்த இருமூர்த்திகளும் கவனித்து உபசரிக்காமல் கோபித்தும் பேசாமல் அவமதித்தும் அனுப்பியகாரணத்தால் மஹரிஷிக்குக் கோபமுண்டாயிருக்கவேண்டுமென்று தெரிந்து, விஷ்ணுபகவான் எழுந்திருந்து அபிவாதனம் செய்து, தபஸ்ரேஷ்டராகிய துர்வாஸ மஹரிஷியைப்பார்த்து, 'மஹரிஷே! எனது கடினமான மார்பில் உதைத்ததனல் தாமரைக்குச்சமானமான தமது திருவடிகள் நொந்திருக்குமே' என்று அந்த ரிஷியினுடைய பாதமலர்களையெடுத்துத் தம்மடியின் மீதிருத்தி வருடிக்கொடுத்துப் பூஜை செய்தார்.

ஸம்ஸர்க்கத்தால் உண்டான ராஜஸமேலீட்டால் கோபமும், தாமஸமேலீட்டால் அகார்யமும் செய்த மஹரிஷியான துர்வாஸர், பரமஸாத்விகரான விஷ்ணுவினுடைய உத்தமகுணத்திலும் உபசாரத்திலும் ஈடுபட்டவராக இருந்து, ஆச்சரியமும் ஆனந்தமும் கொண்டவராக ஸ்வாமியைப் பார்த்துச்சொல்லுகிறார்.

'முக்குணங்களிலும் ஸத்வகுணம், நிறைந்திருந்தால் மாத்திரம் பொறுமையும் அதற்கநுகுணமான செய்கையும் ஏற்படுமேயொழிய, இதர குணங்கட்கு அந்தப்பெருமையுண்டாகாது. அந்த ஸத்வகுணம் தம்மிடத்தில்நிறைந்திருந்ததால், நான் தம்மை பரீக்ஷிப்பதற்காகச்செய்த இந்த அகாரியம் தம்மால் பொறுக்கப்பட்டது. என்னுடைய அஞ்ஞானத்தால் தம்மை நான் பரீக்ஷித்ததாலுண்டான அபசாரத்தைப் பொறுத்தருளிய தமக்கு என்னுடைய அஷ்டாங்க வணக்கமொன்றில்லாமல் வேறு உபகாரம் செய்வது தகுதியாகாது' என்று எழுந்திருந்து பகுவிதமாக ஸ்தோத்ரம்செய்து ஸாஷ்டாங்கமாக வணங்கினர்.

பிறகு அங்குநின்றும் புறப்பட்டுத் தேவஸபைக்குப் போய், தேவேந்திரனிடத்தில் நடந்த வர்த்தமானங்களை விஸ்தாரமாகச் சொல்லித் தாம்கொண்ட உறுதியான தீர்மானத்தையும் தெரிவித்து விட்டுத் தமது ஆச்ரமத்துக்குப்போனார்.

அங்கே வைகுண்டத்தில், துர்வாஸமஹரிஷி புறப்பட்டுப் போனபிறகு, பகவான், துவாரபாலகரையழைத்து, 'ஏன் இங்கே மஹரிஷி வந்தார்? அவேளையில் இங்கே அவரை நீங்கள் அனுப்பலாமா?' என்று கேட்டார்.

அவர்கள், ஸ்வாமியைவணங்கி, 'ஸ்வாமீ! அந்த மஹரிஷியை நாங்கள் பார்த்தபோது அவர் மிகுந்த கோபத்தோடு இருந்ததால், நாங்கள் தடுத்தால் எங்களைச்சபிப்பார் என்ற பயத்தினால் ஒன்றும் சொல்லாமல் இருந்துவிட்டோம். அவர் நேரே தங்களிடம் வந்து விட்டார். இதற்கு எங்களைப் பொறுக்கவேண்டும்' என்று மன்றாடினார்கள்.

அதற்கு, வைகுண்டநாதன் அந்த கிங்கரர்களைப் பார்த்து, 'தௌவாரிகர்களே! எதற்காக நீங்கள் இங்கேயிருந்துகொண்டிருப்பது? ஸேவிக்கவந்தவர்களுக்கு என்னுடைய வேளையையும் அவேளையையும்தெரிவித்துக்கிரமப்படி செய்வதற்கல்லவோ? அவருடைய சாபத்துக்குப் பயந்து என்னுடைய கிரமத்துக்குப் பயப்படாது நீங்கள் தீர்களாதலால், அந்தத் தோஷம் நிவிர்த்தியாகும் பொருட்டுக் கர்ம லோகமாகிய பூலோகத்தில் பிறந்து, எனக்குப்பக்தரானால் அநேக ஜந்மங்களிலும், எனக்குப் பகைவரானால் மூன்று ஜந்மங்களிலும் இந்தலோகத்தை நீங்கள் வந்து அடையலாம்' என்றுசபித்தார்.

உடனே, அந்தத்துவாரபாலகர்கள் பயந்து ஸ்வாமியை வணங்கி ஸ்தோத்தரித்து, அவர் கொடுத்த சாபத்தைத் தள்ளக் கூடாதவர்களாய், பகையாயிருந்தாகிலும் மூன்று ஜந்மங்களிலேயே ஸ்வாமியை வந்து சேரும்படியாக அநுக்ரஹிக்கவேண்டுமென்று அஞ்சலி செய்துகொண்டு அந்த லோகநாதனைப் பிரார்த்திக்கிறார்கள்.

'ஸ்வாமி! தேவதேவேச! தேவரீர் ஸந்நிதானத்தை விட்டு அநேககாலங்கள் விலகியிருந்து கர்மபூமியாகிய புவியில் அநேக ஜந்மங்கள் எடுத்து உழலும்படி செய்யக்கூடாது. தேவரீருக்கு விரோதிகளாக இருந்தாகிலும் ஸ்வல்பகாலத்திலேயே, மூன்று ஜந்மங்களிலேயே சாபம் ஒழிந்து தேவரீருடைய தாமரைபோன்ற பாதங்களை வந்தடைந்து, வைத்தகண்வாங்காமல், காணக்காண கைப்புத்தட்டாமல், களிப்பையே விருத்திசெய்யக்கூடிய தேவரீருடைய திருமேனியின் வடிவழகை எக்காலத்திலும் தரிசனம்செய்துகொண்டு க்ருதார்த்தராயிருக்கும்படி செய்வித்தருளவேண்டும்' என்றுபிரார்த்தித்துக்கொண்டார்கள்.

இவ்விதமாகத்தமது கிங்கரர்களாகிய ஜயவிஜயர்களால் பிரார்த்திக்கப்பட்ட பகவான், அப்படியே ஆகக்கடவதென்று அவர்களை அனுக்கிரஹித்தருளினர்.

என்பது,
பிரம்மாண்டபுராணத்தின் ஒருபாகமாகிய விஷ்ணுபுராணத்தின்
தசாவதாரகல்பத்திலே ஸூதசௌனக ஸம்வாதரூபமான
ஸ்ரீ நாரஸிம்ம உபாக்யானத்தின்
முதலத்தியாயம்.

## இரண்டாவது அத்தியாயம்.

பிறகு, பகவதாஞ்ஞையால் பூமியில் அஸுரகுலத்தில், ஹிரண்யாக்ஷன் ஹிரண்யன் என்னும் நாமம்பெற்ற இரண்டு ஸஹோதரர்களாக, மஹாமேருவுக்கு ஸமானமானதேஹகாந்தியும், மதுகைடவர்களுக்கு ஸமானமான தேஹபலமும் ஆக்ருதியும் உடையவர்களாக அந்த ஜயவிஜயரென்னும் துவாரபாலகர்கள் ஜநித்தார்கள்.

அவருள் ஹிரண்யாக்ஷன் என்னும்மூத்தவன், தன்புஜவலியால் பூமியிலுள்ளவர்க்கும் ஸ்வர்க்க வாஸிகளுக்கும் அளவிடக் கூடாத துன்பங்களைச் செய்துகொண்டும், ப்ரளயாக்நிக்கு ஸமானமான

தனது இரண்டுகண்களின் காந்தியால் அநேகரை எரித்துக்கொண்டும், ஸாதுக்களை ஹிம்ஸித்து அவர் செய்துகொண்டிருக்கும் யாகங்களை நாசஞ்செய்துகொண்டும் திரிந்தான்.

இவனுடைய செய்கைகளுக்குப்பயந்து ஸஹியாத தேவர்களுடைய பிரார்த்தனைக்கிணங்கி விஷ்ணுமூர்த்தியானவர், தமது இச்சையினால் எடுத்துக்கொண்டதான வெண்ணிறமுடைய ஆதிவராஹமாக உருக்கொண்டு, அந்த ஹிரண்யாக்ஷனைத் தூக்கிப் பாதாளத்தில் சென்று, தமது வளைந்தபற்களால் அவன் மார்பைக்கிழித்து அவனை ஸம்ஹரித்தார்.

இளையவனாகிய ஹிரண்யன், ப்ரபஞ்சத்தில் ஒருவராலும் அடையமுடியாத பலத்தைப் பெறவேண்டுமென்று கோரினவனாக, பஞ்சாக்நி மத்தியில் ஒருகாற்பெருவிரலால் நின்று ஐந்து கோடி வருஷங்கள் கோரமான தபஸைச்செய்து, மஹேச்வரரை ப்ரத்யக்ஷீகரித்தான்.

அவனுடைய தபஸுக்கு மெச்சி ப்ரத்யக்ஷரான சிவபெருமான் அவன்விருப்பத்தின்படியே, தேவராலும் மனுஷராலும், யக்ஷராலும் ராக்ஷஸராலும், அஸுரராலும் பன்னகராலும், பசுக்களாலும் பக்ஷிகளாலும், எவ்வித ஆயுதங்களாலும் எவ்வித சாபங்களாலும், பகலிலாயினும் இரவிலாயினும், பேதிக்க முடியாத அழியாத சரீரத்தைப் பெற்று, ஐந்நூறு கோடி வருஷங்களிருக்கும்படியான உத்தமமான வரத்தைக்கொடுத்தருளி அவனைத் திருப்தி பண்ணினார்.

பரமேச்வரரால் அநுக்ரஹிக்கப்பட்ட ஹிரண்யாஸுரன் கர்வங்கொண்டு தேவர்களை த்ருணமாக நினைத்து மூன்றுலகங்களையும் ஜயித்து ஸ்வர்க்கமத்தியபாதாளங்களாகிய அம்மூன்று லோகங்களுக்கும் அதிபதியான தன்மையை அடைந்தான்.

இந்த அண்டத்தில் ஹிரண்யேசன் என்னும் நாமம்தவிர வேறு ஒரு தேவநாமமும் உச்சரிக்கப்படாது என்றும், ப்ரம்ம விஷ்ணுவாதி நாமங்கள் மனதினாலும் ஸ்மரிக்கப்படக் கூடாதென்றும், கட்டளையிட்டான்.

பஞ்சபூதங்களிலேயும் நுழைந்து அணுரூபமாகவும் மாறிக்கொண்டிருக்கும் ஸாமர்த்யம் பெற்றிருந்ததால், அவனுக்குப் பயந்து ஸாதுக்கள் பகவந்நாமஸ்மரணையுஞ் செய்யாதொழிந்தார்களென்றால் யாகயஞ்ஞ அர்ச்சநாதிகள் எப்படி நடத்தப்பட்டிருக்கும்? ஒன்றுமேயில்லை. அதனால், காலங்கள் கெட்டு, ஜீவகோடிகளுக்கு அதிகமான துன்பம் உண்டாகவே, அவனால் பீடிக்கப்பட்ட தேவர்கள், சரண்யனான ஹ்ருஷீகேசனையடைந்து ப்ரார்த்திப்பதற்காக க்ஷீராஸாகரத்தைச்சேர்ந்தார்கள்.

பாற்கடலைக் கிட்டின தேவர்கள், பகவானைச் சரணம் அடைந்து, ‘ஸ்வாமி! லோகநாயக! தேவரீரன்றி எங்களுக்கு சரண்யன் வேறொருவருமில்லையே? தேவரீர் எங்கள் மீது இப்படி உபேக்ஷையாயிருக்கலாமா? இந்த விதம் உதாஸீநராயிருக்க நாங்கள் என்ன அபராதம் செய்தோமே தெரியவில்லை. குழந்தைகளாகிய நாங்கள் அறியாமல் அபராதத்தைச் செய்திருந்தாலும், தாயான தேவரீர் பொறுத்துக் கொள்ளவேண்டும். அந்தப்பாவி ஹிரண்யாஸுரனால் கஷ்டப்படுகிறவர்கள் நாங்கள் மாத்திரமல்ல, ஸர்வலோக ஜீவர்களும் ஸாதுக்களுங்கூட ஸஹியாமல் தவிக்கிறார்கள். ஹே! ஜநார்த்தந! அந்த அஸுரனால் பீடிக்கப்பட்டவர்களாக இதோ ஸர்வஜீவர்களும் பிரார்த்திக்கிறார்கள். ஜகத்ரக்ஷகராகையால் தேவரீர் அவசியம் அனுக்ரஹிக்கவேண்டும்’ என்று பிரார்த்தித்தார்கள்.

அவர்களைப் பார்த்துப் பகவான் அருளோடு சொல்கிறார். ‘அந்த ஹிரண்யகசிபுவினால் பீடிக்கப்பட்ட மூன்று லோகங்களையும் ரக்ஷிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அவனுக்குச் சிவபெருமானால் கொடுக்கப்பட்ட வரத்துக்கு யாதும் கெடுதிவராமல், அவனைக் கொல்வதற்கு உத்தேசித்திருக்கிறேன். அவனைக் கொல்வதற்காக என்னுடைய சுதர்சனம் என்னும் சக்ராயுதத்தை ஏவப்போகிறேன். அதனால் தேவர் முதல் யாரும் நிர்ப்பயர்களாக இருக்கலாம்’ என்று ஹரியானவர் அவர்களுக்கு அபயப்ரதானம் செய்தருளினார்.

தேவர்களும், ஸ்ரீமஹாவிஷ்ணுவால் அருளப்பட்ட அபயப்ரதான வாக்கியத்தால் திருப்தியடைந்தவர்களாகத் தங்கள் தங்கள் இருப்பிடம் சென்றார்கள்.

அந்த ஹிரண்யனுடைய புத்திரன் மிகுந்த தார்மிகனாக உலகத்தாரால் கொண்டாடத்தக்க குணமுடையவன். விஷவிருக்ஷங்கள் நிறைந்தவனத்தில் அமிர்தம் நிறைந்த கல்பதரு தோன்றினதைப் போல் அவ்வஸுரகுலத்தில் உதித்தவன். அவன் உதித்தவுடனே தேவர்கள் பூமழைபெய்தார்கள். ஹிரண்யனோ, தனது பந்துக்கள் குருக்கள் முதலானவரோடு கலந்து அக்குழந்தைக்கு ப்ரஹ்லாதன் என்னும் பெயரை இட்டு அழைத்தான்.

அவ்வளவு மகிமையுடைய ப்ரஹ்லாதனோ, தனது நாமத்துக் கேற்க, உலகத்தாருக்குக் களிப்பை யுண்டுபண்ணக்கூடியவனாக இருந்து, ஸத்குணத்தாலும் சீலத்தாலும் தேஜஸாலும் நிறைந்து, சுக்லபக்ஷத்துச் சந்திரனைப்போல வளர்ந்துவந்தான்.

பிறகு வயது ஐந்தானவுடனே, விதிப்படி பூஜைகள்செய்து, குழந்தைக்கு வித்யாப்யாஸம் செய்யத்தொடங்கினார்கள். குரு, குழந்தையை அழைத்து, அந்த ஹிரண்யன்காலத்து வழக்கம்போல, ஹிரண்யாய நம: என்று சொல்லும்படியாக வற்புறுத்தினர். குமாரனோ ஓம் நமோ நாராயணாய என்று பகவந்நாமத்தையே சொல்லி யருளினான்.

இதனைக்கேட்ட குரு, தமது காதுகளைப்பொத்திக்கொண்டு, வெகுகாலமாக இந்த நாமமே யாவருக்கும் மறதியாயிருக்க, இக்குழந்தை இதனைத்தானாகச்சொல்லக்காரணமென்னவென்று ஆச்சரியம் கொண்டவராகவும், அரசன் காதில் விழுந்தால் தமக்கு எத்தீங்கு விளையுமோவென்று பயம்கொண்டவராகவும், புத்திரனைப் பார்த்து, 'அப்பா! அப்படிச்சொல்லாதே. உனது தகப்பனே லோகநாயகன். ஆதலால், அவன் நாமத்தைச்சொல்', என்று மறுபடியும் அந்த நாமத்தையே சொல்லும்படி வற்புறுத்தினர்.

தொடரும். மோ. வே. கோவிந்தராஜய்யங்கார்.

இந்தப்பாகவத உபந்யாஸங்கள் லோகோபகாரமாகும் பொருட்டும், பகவான் அநுக்ரஹித்தால்போல், இந்த லோகமித்திரனின் பத்ராதிபராகிய எனது நண்பர் M. V. கோவிந்தராஜய்யங்கார் மிகுந்த ஆர்வத்தோடு ஒரு நாள் கேட்க, இஃது பகவானாகவும் ஆத்மாநந்தராயுமுள்ள என்னுடைய பரமாசாரியனுடைய ஆஞ்ஞைதானென்று எண்ணிக்கொண்ட என்னால் மிகுந்த ஸந்தோஷத்தோடு கொடுக்கப்பட்டது.

இந்த உபந்யாஸங்களில் ஆங்காங்கு ஒருகால் பிழைகள் ஏற்பட்டாலும், அவை உபந்யாஸகருடையவை அல்ல. என்னுடைய பிழைகளேயாகும்.

> “ குற்றங் குணமிரண்டுங் கொண்டுநெஞ் சந்திங்களும்
> பெற்றமதூர் வான்போற் பின்னதைச் சென்னியில்
> வைத்து மற்றொன்றை களத்திடை வைக்குமே
> வித்தக முள்ளான் விதந்து.”

சிவபெருமான்போன்றவர் ஸாதுக்களாகையால், குணத்தையே மேலாகக்கொண்டு குற்றத்தையெல்லாம் நெஞ்சிலேயே இருத்திக் கொள்வார் என்று மிகுந்த வணக்கத்தோடு ப்ரார்த்தித்துக் கேட்டுக் கொள்கிறேன்.

ராமதாஸன்.

# அவதாரிகை.

ப்ரம்மத்தின் (சுத்தசைதன்யமாகிய பரப்ரம்மத்தின் பிரதிபிம்பமாகிய (அதன் ஸந்நிதானத்தின் தேஜோபிம்பம்) ஸத்வகுணமாயை விராட்ஸ்வரூபம். இது ஸ்ருஷ்டிக்கு மூலமான வஸ்து. அதன் அம்சங்கள் திருமூர்த்திகளின் ஸ்வரூபங்கள். அவற்றின் ஓரம்சம் அவதாரங்கள். இவை கேவலம் ஸத்வகுணம் மேலிட்டபோது நிகழக்கூடியவை. வ்யக்தம், அவ்யக்தம், மாயை இவையடங்கியது ஜீவஸ்வரூபம்.

அவதாரம்.

அவதார ஸ்ருஷ்டிக்குக் கர்மம் ஜந்மம் உண்டென்று விவகாரமிருந்தாலும், நான் என்னும் பாவம் இல்லாமலிருப்பதால், சுகம் துக்கம் முதலியன பாதிக்கிறதில்லை. பஞ்சபூதங்களில், ஆகாயம் வாயு ஆகிய இப்பூதங்களை எப்படி ஆயுதங்களால் பேதிக்கமுடியாதோ, அப்படியே அவதாரஸ்ருஷ்டியைக்கர்மசம்பந்தம் பாதிக்கிறதில்லை. இவை கண்ணுக்குத்தெரிகிறதில்லை. அவதாரம் தோன்றுறதே என்றால், கண்ணுக்குப்புலனாகிற தீபவொளியை ஆயுதங்களால்பேதிக்கமுடியுமா? முடியாது. அப்படியே கர்மபந்தத்தால் அவதாரம் பாதிக்கப்படுகிறதில்லை. ஆகவே, நான் என்னும் பாவமற்ற ஸ்ருஷ்டியைக் கர்மபந்தம் பாதிக்கமாட்டாது எனக்கொண்டோம்.

பகவான்.

ப்ரபஞ்சத்தில் நடந்ததையும், நடந்து வருகிறதையும், நடக்

கப்போவதையும் அறியக்கூடிய சக்தியைப் பெற்றிருக்கும் ஸ்ருஷ்டிக்குப் (வ்யக்திக்கு) பகவான் என்று பெயர்.

யோகநித்திரை.

ஸ்ரீமந் நாராயணபகவான் யோகநித்திரை செய்யும் நோக்கம் யாதெனின், வெளியிந்திரியங்களையடக்கி சூக்ஷ்மமாகிய இந்த்ரியங்களினால் ஸத்வகுணப்ரதானராயிருந்து நிர்க்குணத்யானஞ்செய்து ஜீவராசிகளைக் கடைத்தேறச்செய்வதுதான். அவர் அப்படி யோக நித்திராவஸரத்திலிருப்பதால், பகவத்பானம் செய்துகொண்டிருக்கிற ஒரு ஜீவனிடத்தில், அந்தப்பகவானுடைய யோகநித்திரையாகிய நிர்க்குணத்யானத்தின் ஒரு தந்து (இழை) கலக்கவே, ஜீவனுடைய த்யானம் விஸ்தாரமாகி அதனால் மோக்ஷாநந்தத்தையடைகிறான்.

கிருஷ்ணாவதாரம்.

அவதாரங்கள் எல்லாவற்றிலும் கிருஷ்ணாவதாரம் பூர்ணம்சம் என்று ஞானிகள் சொல்கிறார்கள். ஏனெனில், அந்த அவதாரத்தில் அநந்த குணங்களினால் பகவத்ஸ்வரூபத்தை விளக்கி அஞ்ஞானிகளைக் கடைத்தேற்றியிருக்கிறார்கள்.

த்யானஸமாகமம்.

பகவதம்சம் பக்ஷபாதமின்றி ஒவ்வொரு ஜீவனிலும் இருப்பதானாலும், ஸத்வகுணம் மேலிட்ட ஜீவனில் விசேஷமாக ப்ரகாசிக்கிறது. ஹ்ருதயகுகையில் வாஸஞ்செய்யும் பரமாத்மாவின் ப்ரதிபிம்பம், மாயை வ்யக்தம் அவ்யக்தம் இவற்றோடு கூட்டிப் பார்க்கப் படுங்காலத்தில் ஜீவனாகவும், ஸத்வகுணம் மேலிட்டு அவைமூன்றும் மறைந்த ஞானஸ்வரூபத்துடன் பார்க்கப்படுங்காலத்தில் ப்ரம்மமாகவும் பார்க்கப்படுகிறது.

ஆத்மஸ்வரூபதர்சனம்.

ஒவ்வொரு ஜீவர்க்கும் ஆத்ம ஸ்வரூபத்தையறிய பக்தியே அவசியமாகும். வாக்கினால்மாத்திரம் சஞ்சலமனதோடு செய்யாமல் நிஷ்கபடியாய் பகவானுடைய நாமபஜனையும் மனத்தால் ஸ்மரணையுஞ்செய்து, அநுஸந்தானமுஞ்செய்து, ஒரேகாலத்தில் ஒரேமனதாய் ஒரே மூர்த்தியின் தாமரைபோன்ற பாதத்தை லக்ஷ்யப்படுத்தி, மனதை அதில் லயப்படுத்தவேண்டும். பிறகு, எப்படி முதலில் தாமரைமலரில் லக்ஷ்யம் வைத்தவன் அது மாறி அம்மலரின் வாஸனையில் லக்ஷ்யத்தைத் திருப்பிக்கொள்வானோ, அதுபோல, ஜீவனும் மூர்த்தியின் பாதத்தை (வெளியிந்திரியங்களை) மறந்து ஞானஸ்வரூபமாகிய ஆனந்தத்தில் தன் மனதை லயப்படுத்திக்கொள்கிறான். இந்த நிலையைப்பெற்றவன் ஆத்மதர்சனத்திற்கு யோக்யதையுடைய பக்தனாகிறான்.

இதனால், காமக்ரோதாதிகளை விவேகத்தால் வென்று, மனதை பகவத்ஸ்வரூபத்தில் வைத்து, ச்ரவண மனன நிதித்யாஸனங்களைச் செய்துகொண்டு, படிப்படியாக பாரமார்த்திக புத்தியை (விவாகாரமற்றது) அனுபவத்திற் கொண்டுவரவேண்டுமென்பது பெறப்பட்டது.

சுகப்ரம்மம்.

நிர்விகல்பரும் காரணருமான பரமாத்மாவைத்தவிர வேறு நினைவொன்றுமில்லாதவராயும் ஜிதேந்திரியராயும் விளங்குகிற சுகப்ரம்மரிஷி தமது தேஹசம்ரக்ஷணைக்காக மாதுகரம் எடுத்திருக்கிறார்.

இதனால் அறியக்கிடப்பது யாதெனிலோ! மதுகரம் என்றால், பல மலர்ந்த புஷ்பங்களில் சென்று, அங்கு அதிகநேரந்தங்காமல்

பறந்துகொண்டே அம்மலர்களிலுள்ள தேனைக்ரஹிக்கும் வண்டு கட்குப்பெயர். மாதூகரம் எடுக்கிறது என்றால், பிக்ஷையெடுப்பவர் இறக்கப்பட்டிருக்கும் கிருஹத்தில் சென்று, அங்கு பால்கறக்கும் காலவளவுக்கு நின்று, அந்நேரத்திற்குள் தமக்குக்கிடைத்ததைப் பெற்று அந்யக்ருஹம் செல்லவேண்டும் என்பதே பெறப்பபட்டது.

பரீக்ஷித்.

ஸகலவிதமான சம்பத்தும் ஏகசக்ராதிபத்தியமும் பொருந்தியுள்ள பரீக்ஷித்தரசர், பலவானுகவும், யவ்வனத்தையடைந்தவராகவும் பெரியோரால் பக்த சிரோமணியென்று அழைக்கப்பட்டவராகவும் இருந்தாலும், ராஜ்யபரிபாலனம் செய்ய இச்சிக்காமல் வைராக்யத்தோடிருந்து ப்ராயோபவேசம் செய்துகொள்ள நிச்சயித்து பாகவத ச்ரவணத்தால் மோக்ஷம்பெற்றார்.

இதனால், இப்பூலோகத்தில் அனுபவிக்க எவ்வித சம்பத்திருந்தாலும் அவை ஸாச்வதமல்லவென்று தள்ளி, வைராக்யம் மேலிட்டு ஸத்குரு உபதேசம்பெற்று, நாசமாகக்கூடிய வஸ்துக்களில் சிறிதேனும் அபிமானமில்லாமல் கீழ்க்கூறிய நிர்க்குணத்யான பக்தியைச் செய்தால், அது மோக்ஷத்திற்குக் காரணமாகுமென்பது பெறப்பட்டது.

ஜனங்களின் உபகாரார்த்தம் தேஹத்தை வைத்துக்கொண்டிருக்கும் ஞானிகளின் நோக்கம் இதுவென அறியலாயிற்று.

வ்யாஸபகவான்.

ஸத்வகுணரான விஷ்ணுவின் அம்சத்தால் அவதரித்துள்ள வ்யாஸர், தர்மாதர்மங்களை எடுத்துக்காட்டி ஜீவர்கள் மோக்ஷமடையும்படி செய்விக்கவேண்டியதற்காக அவதரித்தவர். தர்மத்தையும் கர்மத்தையும் சரியாகநடத்தி பகவத்பக்தியினால் மோக்ஷமடைய

ஸாதனமாகிய க்ரந்தங்களைச் செய்திருக்கிறார். அவர் தபோநிதி ஜிதேந்திரியர் மஹான் ஆத்மஸ்ரூபத்தையடைந்தவர். ஆயினும், தம்முடைய அந்தராத்மா த்ருப்தியடையாமலிருந்ததால், அந்தத் தாபம் நீங்கும்பொருட்டுப் புண்யநதியாகிய கங்கையின் கரையில் நிஷ்டையிலிருந்தார்.

இதனால், பரோபகாரங்களில் ஒன்றுகுறைந்தாலும் அந்தராத்மா த்ருப்தி யடையாதென்றும், மிகுந்த சிரமப்பட்டாவது ஸகாம கர்மங்களை முற்றும் ஒழிக்கவேண்டுமென்றும், அதனால் ஆத்மதரிசனம் ஸுலபமாகவே கிட்டுமென்றும் தெளிவிக்கப்பட்டோம்.

நாரதபகவான்.

வேதவ்யாஸருடைய த்யானகாலத்தில் பகவான் நாரதர் ப்ரஸன்னமானார். இவர்பரிசுத்த சைதந்யர். மாயா ஸம்பந்தத்துடன் கூடிய ஸத்வகுணப்ரதானரான விராட்ஸ்வரூபத்திற்கும் அதீதமான பரமாத்மாவென்று சொல்லப்படுகிற ப்ரம்மஸ்வரூபத்தை யறிந்தவர்.

வியாஸபகவான், ஜீவர்கள் பகவத்தர்சனத்தை யந்தர்முகத்துடன் தரிசித்து மோக்ஷமடைவதற்கு யோக்யமான க்ரந்தங்களைச் செய்வதற்கென்று எடுத்திருப்பது மனுஷாவதாரமானதால், ஒருகால் அக்காரியம் மறந்துபோய்விடுமோ என்று வியாஸருக்கு நினைவுறுத்த நாரதபகவான் வ்யாஸரிடம் வந்துசேர்ந்தார்.

பகவத்பக்தி ஜீவருக்கு ஆவச்யகம். அந்தப்பக்தியின் நிமித்தம் ஸ்வதர்மத்தைச்செய்யாமல் விட்டுவிட்டாலும் குற்றமாகமாட்டாது. ஏனெனில், பகவத்பக்தி செய்துவருகையில் இந்தத்தேஹம் தொலைந்து வேறொருதேஹம் கிடைத்தாலும், அப்போதும் முன் செய்துவைத்திருந்த பக்தியே ஜீவன் கடைத்தேறும்படி முன்ஜன்மவாஸனாபூர்வமாய் மேலிட்டு ஞானியாகிறான்.

ஸூ-ஹ—அதிமனோகரமாய் சரத்காலம் தோன்றுகிறது. பூரணசந்திரன் இருண்ட மேகங்களை விலக்குகிறான். ஒவ்வொரு திசையிலும் வெண்மேகங்கள் பரவுகிறபடியால் ஓடை முதலியவற்றில் நீர் கலங்காமலிருக்கிறது.

பாரி—அதனால் இப்போது என்ன செய்யவேண்டும்?

ஸூ-ஹ—இந்தவூர் ஸ்ரீநாமகிரிஸமேத நரசிம்மசுவாமியின் உத்ஸவத்திற்காக யாவரும் கூடியிருக்கிறார்கள். இவர்கள், கவிதைக்கு உறைகல்லாகவும், சாஸ்திரங்கட்கு விளையாடுமிடமாகவும் அறிவுச்செல்வத்திற்கு நிதியாகவும் தோன்றுகிறபடியால், தவத்தினால் கிடைக்கத்தகுந்த இவர்களின் முன்னே ஏதேனும் ஒரு ரஸிகமான நாடகத்தை நடித்துக்காண்பிக்க இச்சிக்கிறேன்.

பாரி—(தலையசைத்து) அது இன்ன நாடகம் என்று இல்லையா?

ஸூ-ஹ—என்னிடம் ரஸிகஜன சித்தரஞ்சனமான ஜீவோஜ்ஜீவநம் என்னும் ஒரு புதிய நாடகம் இருக்கிறது.

பாரி—அதென்னய்யா புதிய நாடகம்? அதில் என்ன விஷயம் சொல்லப்படுகிறது? யானதைபறியலாமா? இவர்களெல்லாரும் அறிய விரும்புவார்களே.

ஸூ-ஹ—அறியப்படாததென்றல்ல, கதைதானே. அது போகப்போக நாடகத்தால் தெரியவருமே. ஆனாலும் அதன் கருத்தைச் சொல்லுகிறேன்.

பாரி—ஆமாமாம். அதைத்தான் நான் அப்படிக்கேட்டேன்.

ஸூ-ஹ—சொல்கிறேன். ஆயுர்வேத வைத்தியத்தை யனுசரித்தது இது. ஜீவன் கதாநாயகன். புத்தி நாயகி. வியாதிகள் சத்துருக்கள். நாயகன் சத்துருக்களைவென்று நாயகியையடைவது. இதுதான் உட்கருத்து.

பாரி—என்ன! மிகவும் நன்ருயிருக்கும்போலிருக்கிறதே. ஆச்சரிய மாய்ச் செய்திருக்கிறீர்கள். வைத்தியமுறையென்ருல் யாருக் கும் பிரியந்தானே!

ஸூ—ஆமாமாம். வைத்திய சாஸ்திரத்தில் யாருக்கும் ஒரு பிரியம் உண்டாகும்பொருட்டே நாடகமாக்கப்பட்டிருக்கிறது. இந் நாடகத்தைக் கவனித்துக்கொண்டே வந்தால் நோய்க்கிடங் கொடாதவழி தேடிக்கொள்ளலாகும்.

பாரி—சரி, ஆனல் ஏன் தாமஸம்செய்கிறீர்கள். இதில் நான் என்ன செய்யவேண்டும் ?

ஸூ—நமது கூட்டத்தாரையழைத்து நாடகத்தினுக்குத்தகுந்தபடி பாத்திரங்களாக அமைந்துவரும்படி செய்யவேண்டியதுதான் உனது தொழில்.

பாரி—அப்படியா! இன்னர் பாலே, இன்னர்தான் தலைலே, குடம் என்ப தில்லையா?

ஸூ—எல்லாம் அவரவர்க்குத் தக்கபடி ஏற்படுத்தியிருக்கிறேன். செய்துகொள்வார்கள். இங்கு வேடிக்கை பேசிக்கொண்டிருக் கப்படாது. விரைவில் செல்வாயாக.

பாரி—ஆஹா. இதோ போகிறேன். (சற்று நடந்து, மறுபடியும் திரும்பிவந்து) ஏன் ஐயா! ஒரு ஸந்தேகம் ஜனித்துவிட்டதே.

ஸூ—என்ன சந்தேஹம் உனக்கு?

பாரி—ஆமாம், நான் தான் போய்ப் பாத்திரங்களைச்செய்கிறேன், பிறகு, பிறகு, அட! என்னவிது? ஏதோ சந்தேஹங்கொண்டு வந்தேனே இப்போது! மறந்துவிட்டேனே. (ஸூத்திர தாரரைப்பார்த்து) என்ன ஐய! என்ன ஐய என் சந்தேஹம்? உங்களுக்குத்தெரியுமே.

ஸூ—எதுவிருந்தாலும் பார்த்துக்கொள்ளலாம். விரைந்துபோ. வேடிக்கையாயிராதே. மஹான்களுக்கு அருசிதோன்றிவிடும்.

பாரி—ஞாபகத்துக்குக் கொண்டு வந்துவிட்டேன். தங்களுக்கு என்ன வேலை என்பதுதான்.

ஸூ—எனக்கா? வந்த பாத்திரங்களைச்சரிவர—

பாரி—தட்டிக்கொடுக்கிறதோ?

ஸூ—ஆமாம். தட்டிக்கொடுத்துச் சபை சந்தோஷப்படும்படி ஆட்டிவைக்கிறதுந்தான். சீக்கிரம்போ.

பாரி—நல்லது, அப்படியே போகிறேன். (உள்ளேபோய் மீள்கிறான்.)

ஸூ—என்ன? உடனே வந்துவிட்டாய்.

பாரி—நீங்கள் விரைந்து போகச்சொன்னீர்கள்,நான் விரைந்து வந்துவிட்டேன்.

ஸூ—அங்கே எப்படி ஸந்தர்ப்பம்?

பாரி—எல்லாம் சரிதான், கதாநாயகனாகிய ஜீவனுக்கு விஞ்ஞானசர்மா முதலிய மந்திரி ஸாமந்தர்களும், பிரதிநாயகனாகிய க்ஷயமகாராஜனுக்குப் பாண்டு, காசன், ஜ்வரன், குன்மன், அதிசாரன் முதலிய பரிவாரங்களும் அமையவேண்டியதற்குத் தக்கபடியே, நமதுகூட்டத்தில் புண்டரீகன், கேயூரகன், மயூரகன், சரபங்ககன் இருக்கின்றார்கள். நன்றாய்த்தான் ஏற்பாடு செய்திருக்கிறீர். அவர்களும் தக்கபடி நடிக்கப்பட்டவர்கள்தாம். தெய்வபலமும் கூடவிருக்கவேண்டும். தெய்வபலமே பெரிதல்ல. இந்தச்சபையிலுள்ளவர்களுடைய அநுக்கிரஹமும் பூர்த்தியாயிருக்கவேண்டும்.

ஸ-ெ—இது ஒருபெரிய காரியமாகுமா? ஸ்வபாவத்திலேயே அநுக்கிரஹ புத்தியையுடைய மஹான்களது தரிசனத்தினலேயே நமக்குக்காரியஸித்தி யாகுமென்பதற்குச் சந்தேகமேயில்லை. ஏனெனில், மஹான்களின் தரிசனம் ஆதியையும் வியாதியையும் கண்டிருக்கிறது. உத்ஸாகத்தைக்கொடுக்கிறது. புத்திநுட்பம் பொருள் இவற்றைத்தருவதில் பிரஸித்திபெற்றிருக்கிறது. சத்துரு நிரஸனத்திலே தைரியத்தை யுண்டுபண்ணிக்கொடுக்கிறது. ஆகையால் இதில் விசனம் வேண்டாம்.

பாரி—இல்லை. இவர்களே இதைப்போன்ற அனேக நாடகங்களை யுண்டுபண்ணப்பட்டவர்களாயிற்றே, அவர்கட்குமுன்னிலையில் நாம்—

ஸ-ெ—நாம் எப்படி பயமில்லாமல் ஆடுகிறது என்கிருயா? கேள். தரையில் சிறுவீடு கட்டி விளையாடும் சிறுவர் சிறுமிகளைப்பெருவீடு கட்டுவதில் தேர்ந்த கொத்தர்கள் கோபிப்பார்களோ? மாட்டார்கள். இன்னும் உத்ஸாகப்படுத்துவார்களல்லவா? அதுபோலவே கற்றுத்தேர்ந்த இந்தச்சபையோரும் நம்மை யுத்ஸாகப்படுத்துவார் என்பதற்கு யாதொரு சந்தேஹமும் கொள்ளவேண்டாம்.

பாரி—ஆனல், உமது விரோதியான விகடன் என்ன செய்வானே என்று சங்கிக்கிறேன்.

ஸ-ெ—அவனைப்பற்றிக் கொஞ்சமும் கவலையென்பதேயில்லை. சற்று கவனித்துக்கேள், கதாநாயகனுகிய ஜீவமகாராஜனை விரோதித்துக்கெடுக்கவந்த க்ஷயமகாராஜன், எவ்வளவு முயன்றும் தோல்வியடைந்துதானே அழிந்தான். அது எதனுல் நேர்ந்தது? ஜீவமகாராஜனுக்கு மஹான்களின் தரிசனமும் அநுக்கிரஹமும் அடிக்கடி இருந்துகொண்டிருந்ததால்தானே? அதுபோல இப்பெரியோர்களது கிருபையுள்ளவரையில் எவ்விதத் துன்பமும் நேரிடாது. எல்லாம்வல்ல இறைவன் தொண்டர்

உள்ளத்திலே குடியிருக்கிறாராகையால், அவரும் பூர்ணமாக அனுக்கிரஹஞ்செய்வார் என்பதில் சிறிதேனும் நான் ஸந்தேஹிக்கவேயில்லை.

(உள்ளேயிருந்து)

அடே! அடே! யாரடா வெளியில் எனது ஜீவமகாராஜனை இழித்து அலம்பாவிதமாய்ப்பேசுகிறது? அவருக்கு மந்திரியாகிய யான் (விஞ்ஞானசர்மா) இருக்கும் வரையில் க்ஷயன் தலையெடுக்கான் என்பதை நீயறியாய்போலும். பயமில்லாமல் வார்த்தையாடாதே.

ஸ-ஒ-(கேட்டு) மாரிஷ! ஜீவராஜன் மந்திரியாகிய விஞ்ஞானசர்மாவின் வேஷம்புனைந்துகொண்டு என் இளையவன் கலகஹம்ஸன் நாடகமேடைக்கு வருகிறான். நாமும் பின்நடக்கவேண்டியதைக்கவனிப்போம் வா.

பாரி—சரி போவோம். (செல்கிறார்கள்.)

(தொடரும்.)

Pandit. M. V. சடகோபாசாரியார். A. A. C.
ஆயுர்வேத பூஷணம்,
நாமக்கல்.

# மெய்யுணர்தல்.

"விரும்பித் தொழுவார் வினைதீர்க்கு முக்கட்
கரும்பிற் பிறந்த களிறு"

மெய் என்பதற்குச் சத்தியம் என்பது பொருள். சத்தியம் என்னும் பொருள்தரக்கூடிய சொற்கள் பலவுள. அவற்றுள் மூன்று சொற்களை எடுத்துக்கொண்டு இதன் பொருளையாராய்வாம்.

அவை உண்மை வாய்மை மெய்ம்மை என்பன. இவற்றின் பகுதிகள் உள், வாய், மெய் விகுதி மை. பகுதிகளின் பொருள் முறையே உள்ளம் அல்லது மனம், வாய் அல்லது வாக்கு, மெய் அல்லது காயம் என்பனவாம். மை விகுதி பண்புப்பெயரின் பொருளாய் வருதலினால், தன்மை என்று பொருளாம். எனவே, திரிகரணங்களையும் சுத்தி செய்யக்கூடிய தன்மை இவ்வொன்றினிடமே உண்டு.

பரமன், உயிர்க்கொலைசெயாமை அருள் பொறியடக்கல் பொறை தவம் வாய்மை அன்பு அறிவு என்னும் எட்டு மலர்களால் அருச்சிக்கப்படுவான் என நூல்கள் கூறும்.

இவற்றில் வாய்மை இவ்வெட்டுக்கும் சிரோரத்தினம் போன்றது. இதன் உயர்வை நோக்கியே பற்பல பாஷைகள் பேசும் சமயகோடிகள் தங்கள் தங்கள் நூற்களில் கூறும் நீதிகளுக்குள் இதனை முதன்மையாக வைத்துக்கொண்டாடுகிறார்கள். திருஷ்டாந்தமாக உத்தரவேதமென்னும் குறளில்,

"யாமெய்யாக் கண்டவற் றுளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற." என்றும்,

ஆங்கிலத்தில் 'No relegion higher than truth', என்றும் கூறப்பட்டுள்ளன.

இதற்குத் திருஷ்டாந்தமாகச் "சொல்லுக்கரிச்சந்திரன்" எனப்பெயர் பெற்ற மன்னர் மன்னன் சரிதை உலகம் அறிந்ததாயினும், இதிலுள்ள சில முக்கிய அம்சங்களையேனும் எடுத்துக்கூறல் இன்றியமையாததாம்.

விசுவாமித்திரர் அரிச்சந்திரனுடைய குணங்களை எடுத்துக்காட்டி, அதனை உலகத்தார் பின்பற்றவேண்டியும், வாய்மையென்பது தான் தெய்வம் இதனைப்பொருளாகவுடையவனே எல்லா நற்குணங்களையும் உடையனாகச் சகலராலும் போற்றப்படுவான் என்பதையும், இவ்வொரு தருமமே ஒருவனுடைய திரிகாரணங்களையும் சோதிப்பதற்குத் தகுந்ததென்பதையும் கண்கூடாகக்காட்ட, அவன் மனைவி மக்கள் நாடு முதலானவைகள், அவனை விட்டுப்பிரியச்செய்து நீசமாதரை யவனிடனுப்பி மனதைச்சோதித்தும், பொய் சொல்லும்படி அவனைப் பலதடவையில் வற்புறுத்தி வாக்கைச் சோதித்தும், நக்ஷத்திரத்தரகர் வீரவாகு முதலவரைக்கொண்டு சரீரத்தைச் சோதித்தும், இவையன்றி அவனுடைய புத்திரமித்திர களத்திராதிகளுக்கு அளவிறந்த துக்கத்தையும் உண்டுபண்ணினார். அரிச்சந்திரன் இவ்வித இடையூற்றுக்குள்ளாகியும், தான் கொண்ட விரதந்தவறாது சிறிதும் மனத்தளர்ச்சியின்றி வாய்மையாகிய தெய்வத்தைத் திரிகாரணங்களாலும் போற்றி வர, அத்தெய்வம் பிரசன்னமாகி முன்னிலும் பதின்மடங்கு வேண்டும் வரங்களைத்தந்து அனுக்கிரகித்தது.

இதுகாறும், 'மெய்யுணர்தல்' என்னும் பதத்தில் மெய்யின் பெருமை சிறிது கூறப்பட்டது. இனி, மெய்யுணர்தலென்பது, ஆகாயத்தினிடத்தில் கலந்திருக்கும் காற்றும் ஜலமும் ஆகாயத்தில் சம்பந்தப்படாதனபோல எல்லாப்பொருள்களினுங் கலந்துநின்றே ஒன்றினுங்கலவாதுநின்ற இறைவனாலும், அவன் வழிப்பட்டாராலும் ஓதப்பட்ட மக்கட்குறுதிபயக்கும் நூல்களிற்கூறும் பிறப்புவீடுகளையும் அவற்றின் காரணங்களையும் விபரீத ஐயங்களானன்றி உண்மையானுணர்தலாம்.

உண்மையானுணர்தலாவது, மக்கள் தேவர் விலங்கு நரகர் என்னும் நால்வகைப்பிறப்பினும் ஆதியாத்மிகம் ஆதிதைவிகம் ஆதிபௌதிகம் என்னும் மூவகைத் துன்பங்களினும் ஆன்மா உள்ளாகவேண்டியிருத்தலின் இவைகளில் நிவர்த்தியின்பொருட்டு உலகத்தார் பொருள்கண் மாட்டுக்கூறும் கற்பனைகளைக் கண்டொழித்து உள்ளபடி உணர்தலாம்.

விபரீதமாவது, பொருள்களின் உண்மைத்தன்மையை நீக்கி வேறாக எண்ணுதலாம். இங்கு விபரீதவுணர்வாவது மறுபிறப்பும் நல்வினைதீவினையின் பயன்களும் கடவுளும் இல்லையெனவும், மற்றும் இத்தன்மையன போலச்சொல்லும் பயக்கநூல் வழக்குகளை மெய்ந்நூல் வழக்கெனத் துணிதலாம்.

மயக்கம் அவிச்சை மருள் இவை ஒரு பொருளன.

மயக்கமாவது, ஒரு பொருளைக்கண்டு இதுவோ அதுவோ என்றுப்பலவாறு சந்தேகித்தலாம். அஃதாவது, மறுபிறப்பும் இருவகைப்பயனும் கடவுளும் உளவோ இலவோ என ஒன்றிலும் துணிவுபிறவாது நிற்றலாம்.

விபரீதவுணர்வு உள்ளவரையில் பிறவி நீங்காவென்பது யாவருக்கும் தெள்ளிதிற்புலப்படும். ஐயவுணர்வினுக்கும் இவ்விதியே. ஐயவுணர்வினைக்காட்டிலும் விபரீதவுணர்வினன்பாடு மிகவும் பரிதாபிக்கத்தக்கதே.

இனி, இம்மெய்யுணர்தலை அடைதற்குரிய சாதனம் என்னெனின் அது மூன்று வகைப்படும். அவை கேட்டல் சிந்தித்தல் தெளிதலாம்.

கேட்டலாவது, ஒழுக்கமுடைய கற்றறிந்தோர் பலரிடத்தும் பலகாற் பழகி அவர்கள் கூறும் உறுதி நூல்களைக் கேட்டல். இக்கேள்வி, வறுமையினாலாவது அறியாமையினாலாவது இடுக்கண்பட்டு மனந்தளர்வுழி, வழுக்குதலையுடைய சேற்றுநிலத்துச் செல்பவனுக்கு ஊன்றுகோல்போல் உதவும்.

கேள்வியெனினும் சிரவணமெனினும் ஒன்றே.

சிந்தித்தலாவது, அப்படிக்கேட்ட உபதேசப்பொருளைச் சுருதி யுக்தி அனுபவம் முதலியபிரமாணங்களினால் தெளிய ஆராய்ந்து உணர்தலாம்.

சிந்தித்தல் எனினும் மனனம் எனினும் பொருந்தும். பாவனை பண்ணுதலாவது, உயிர் உடம்பின் நீங்குங்காலத்து எதுபாவிக்கப்பட்டதோ, அஃது அதுவாய்த்தோன்றுமாகலின், வீடெய்துவார்க்கு அக்காலத்துப் பிறப்பிற்கேதுவாய்த்தான் முன்பழகிவந்த உயிர்ச்சார்பு பொருட்சார்பின் வாதனையாலே சொரூபமானது கைகூடாமல், மனம் விடயாதிகளிலே சலியாமலிருக்கும் வண்ணம் பரம்பொருளை உணரப்பயிலுதலாம்.

இப்பயிற்சியானாய உணர்வு அடிபட்டு வரவரப் பண்டை உலகியலுணர்வு தூர்ந்துவரவே, பொருள்களினிடத்தே விருப்பு வெறுப்பொழியும். விருப்பு வெறுப்பொழிய ஆசை நீங்கும். அது நீங்கப்பிறவாமையுண்டாம். இக்கருத்துப்பற்றியே, தெய்வப்புலமைத் திருவள்ளுவனார்,

"வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்." என்றருளிச்செய்தனர்.

இதன் பொருள், தேகம் உள்ளளவும் ஒருவன் விரும்பினும் விரும்பாதொழியினும், பிராரத்தத்தாலே உள்ளது கூடுமாகையால், ஒன்றை விரும்பவேண்டுமிடத்துப் பிறவாமையொன்றுமே விரும்பவேண்டும்.

அந்தப்பிறவாமையானது, தான் யாதொருபொருளையும் இச்சியாதிருத்தலால் உண்டாகும் என்ற பிரமாணமிருத்தலினால், நம் விரும்பத்தக்க பரம்பொருளிடத்து பிறவாமைக்குக்காரணமான அவாவறுத்தலொன்றுமே வேண்டிக்கொள்ளவேண்டுவது. இந்த அவாவறுத்தலுண்டாகவே, அந்தப் பிறவாமையுண்டாம். இக்கருத்தையுள்ளடக்கியே,

"உணர்ச்சி யச்சாக வுசா வண்டியாகப்
புணர்ச்சிப் புலனைந்தும் பூட்டி—உணர்ந்ததனை
யூர்கின்ற பாகன் உணர்வுடைய னாகுமேல்
பேர்கின்ற தாகும் பிறப்பு" என்றார் குமரகுருபரசுவாமிகள்.

உணர்ச்சியை இச்செய்யுளில் மெய்யுணர்தலாகவும், உசாவைமெய்யுணர்தற்குச் சாதனமாகிய கேள்வியாகவும். புணர்ச்சிப்புலனைந்தும் பூட்டலை (ஐம்புலக்காலைகளைக்கட்டித் தத்தம் வழியிற்செல்லவொட்டாது தடுத்தலை) கேள்வியின் பயனாகவும், உணர்ந்ததனை என்பதில், உணர்ந்து என்பதனைத் தெளிதலாகவும், உணர்ச்சியுடையவன் என்பதில், உணர்வைப்பாவனையாகவும் குறித்து மெய்யுணர்வின் இலக்கணங்கூறினர். இத்தன்மைவாய்ந்தோரே தத்துவஞானிகளென்னப்படுவோர். இவர்கள் செயலைப்பற்றி,

"தன்னையறிந்திடும் தத்துவஞானிகள்
முன்னைவினையின் முடிச்சையவிழ்ப்பர்கள்
பின்னைவினையைப்பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில்வைத்த சிவனருளாலே."

என்னுந் திருமந்திரச்செய்யுளால் உணரப்படும்.

இனி அவாநீப்பின் ஆனந்தமாம் என்பதைக்குறித்து,

"ஆசையறுமின்களாசையறுமின்கள்
ஈசனோடாயினு மாசையறுமின்கள்
ஆசைபடப்பட ஆய்வருந்துன்பங்கள்
ஆசைவிடவிட ஆனந்தமாமே." என்னுந் திருமந்திரச்செய்யுளாலும் காண்க.

ஆகவே மெய்யுணர்வின் பயன் அவவறுத்தல், அதன்பயன் பிறவாமை, இப்பிறவாமையே நிரதிசயானந்தமாகிய வீடாம்.

M. C. ஆனையப்ப முதலியார்,
தமிழ்பண்டிதர்.

# பெண்கல்வி.

---o---

பெண்களின் நல்ல நிலைமைக்காக விவாதஞ்செய்துகொண்டிருப்பவர் இந்தியர் மாத்திரமேயல்ல, ஐரோப்பியரும் அதிகமாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். இந்தியர், பெண்களின் படிப்பைப் பற்றியும், ஐரோப்பியர், பெண்களின் அரசாங்கசம்பந்தத்தைப்பற்றியும் விவாதம் செய்கிறார்கள். எப்படியாயினும் பெண்களின் நிலை எத்தேசத்திலும் இதுவரையிலும் ஒரு முடிவுக்கு வாராததாகவே இருக்கிறது. இந்த விஷயமாக ஐரோப்பியருக்கு யாம் ஒருவிதமான உதவியும் செய்வதற்கு இயலாதவராயினும், இந்தியப்பெண்களைக் குறித்தவரையில் ஒரு தீர்ந்த முடிவுக்கு வரவேண்டுவது அவசியம்.

ஆண்களுக்காயினும் பெண்களுக்காயினும் பொதுவில் படிப்பு என்பது இன்னவகைத்தது என்று நாம் முதலில் ஆராயவேண்டும். நிதர்சனமாகக்கவனித்தால் படிப்பென்பது பொதுவான கூட்டுறவுக்குக்காரணமாக நிற்குமே யன்றி வேறன்று.

ஒரு மனிதன், நாளுக்குநாள் மிதமிஞ்சிச் செலவுசெய்து கடைசியில் தான் தரித்திரதசைக்கு வந்தும் அப்படியே இருப்பானானால், அவனைக்கற்றுணர்ந்தவன் என்று சொல்வதற்கு நமது வாக்குக்கூசி நிற்காதா? ஒருஸ்திரீ, கணவனுடைய வரும்படியையும் குடும்ப இருப்பையும் கவனித்துச்செலவு செய்யாது, கணவனோடு வாதித்தாகிலும் அவசியமில்லாத அதிகச்செலவுகளைச்செய்து தன்னையும் கணவனையும் தீராத்துயரத்துக்கு ஆட்படுத்திக்கொண்டாளாயின், அவள் எண்ணிறபடித்திருப்பினும் அவளைப்படித்தவள் என்று சொல்லத்துணிவோமோ? கப்பலைக்கவிழ்ப்பவனைத் தேர்ந்த கப்பலோட்டி யென்று ஒருவரும் சொல்ல முன்வரமாட்டார்.

ஆகையால், படிப்பென்பது, தன் இருப்பையும் தன் குடும்ப இருப்பையும் தனக்கு அதனோடுள்ள சம்பந்த விருப்பையும் தெரிவிக்கும் ஒரு வார்த்தையேயாகும். ஒரு ஸ்திரீ, தானடங்கி நிற்பதற்

கான பழக்கமும் வன்மையும் பெற்றாலொழிய செல்வை மட்டுப் படுத்தவாவது புருஷனுக்குக் கௌரவத்தைத்தரவாவது எண்ணங் கொள்ளவேமாட்டாள்.

தன்னடக்கமென்பது, அன்போடும் அறிவோடும் கூடிய படிப்பேயாகும். அதாவது படிப்பென்பது மனச்சாக்ஷிக்கு ஒத்துநின்று இருதயத்தையும் புத்தியையும் அதற்கு ஏவலாளர்களாக உழைக்கும்படி செய்விப்பதேயாம். நடத்தையை ஒழுங்குபடுத்திக்கொள்வதே படிப்பதின்முக்கியகருத்தல்லவா? எனெனில் நன்னடத்தையாலன்றி ஒருவரும் உயாமுடியாது.

> "இடர்தீர்த்தல் எள்ளாமை கீழினஞ் சேராமை
> படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின்—நடைதீர்த்தல்
> கண்டவர் காமுறும் சொற்காணில் கல்வியின்கண்
> விண்டவர்நூல் வேண்டா விடும்."

ஆனால், நம் நிலையையும் உலகில் யாவற்றோடும் பின்னிக் கொண்டிருக்கும்படியாகச் செய்துகொள்ளவேண்டும். அதற்காகத் தேடிக்கொள்ளவேண்டிய பொருள்களையுங்கூட உலகத்தினுக்கும் ஒழுக்கத்தினுக்கும் ஏற்றபெற்றி தேடிக்கொள்ளவேண்டுமேயல்லாது, 'என் மனமே எனக்கு அரசன்' என்று தன் மனம்போன வழியிலே செல்லாமல் உலகொப்ப நடப்பது ஒவ்வொரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இன்றியமையாதது.

தனது தினசரிகளைக்கவனித்துநடக்க, ஒரு சாதாரண ஸ்திரீக்குத்தன் சொந்த அறிவோடு சிறிது யுக்தியும் கலந்திருந்தாலே போதரும். ஒரு மிடாதாரிணியைப்போல் இருப்பவர்க்கு அப்படியல்ல. தனது அப்போதய நிலைமை கெடாதிருக்கும் பொருட்டு, அவளுக்குச்சிற்பசாஸ்திரம், வேளாண்மை, வட்டிக்கணக்கு, கூலிக்கணக்கு இவைபோன்ற சில அறிவுகளும் கலந்திருக்க வேண்டியதே அவசியம். இங்கும் கவனித்துப்பார்த்தால், அவளுக்கு மேற்கண்ட சாஸ்திரங்களில் அறிவு மாத்திரம் இருந்தால் செல்

லாதென்றும், அதனோடு அன்பும் பகுத்தறிவும் இருந்தேதீரவேண்டு மென்றும் ஏற்படுகிறது. இவ்வளவு கலந்த நிலைமையுடைய ஒரு பெண்மணியே எச்சமயத்திலும் தனது நிறையைக்காத்துத் தன்னை நல்வழிக்குத் திருத்திக்கொள்வாள் என்று சொல்ல இடமுண்டாகிறது. ஒரு குடும்பத்துக்குத் தலைவியாகவும் தாயாராகவும் உள்ள ஒருத்தி, அவசியம் திரிகணங்களாலும் சுத்தையாகவும் ஒழுக்கமுடையவளாகவும் இருக்க எவ்விதத்திலும் முயல்வது அவசியம்.

காலதேசவர்த்தமானங்களால், முற்காலத்திலும் இக்காலத்தில் குடும்பபாலனத்தைப் பலவிதத்திலும் ஆய்ந்தோர்ந்து நடத்தவேண்டியது ஸ்திரீ புமான்களுக்குக் கடமையாக நேர்ந்துவிட்டது. உட்கொள்ளும் உணவும், உடுக்கும் உடையும், நடக்கும் ஒழுக்கமும், செய்யும் செலவும் ஆராய்ச்சியிலேயே ஆகவேண்டியது. இவ்வித ஆராய்ச்சி, அவரது வம்சத்தையவர் புத்திரரால் விருத்திக்குக் கொண்டுவருகிறது. அஃதில்லாதது அந்த விருத்தியை யடையாததோடு க்ஷீணிக்கவும் நேருகிறது. இந்த மாதிரியான யுக்தி கலந்த பழக்கத்தினையே படிப்பென்று வற்புறுத்துகிறோம். இவ்விதமான உண்மைப்படிப்புடையவளே படித்தவள் (கற்பினள்) என்றழைக்கப்படுவளேயன்றி, பலநூற்பயிற்சியிருந்தும் அன்பும் ஒழுக்கமுமில்லாதவள் அப்படியழைக்கப்படாள். அவளுடைய அன்பும் அருளும் அடக்கமும் ஆதரவும், ஊக்கமும் ஒழுக்கமுமே அவளை நாகரிகமும் பகுத்தறிவும் பெருந்தன்மையுமுடையவளென்று உலகஞ்சொல்லும் படி செய்கின்றன. அவள் படித்த பூகோளசாஸ்திரமும் தேச சரித்திரங்களும் அவள் மனப்பாடஞ்செய்த இங்கிலீஷ் முதலிய பாஷாபுஸ்தகங்களும், அன்புடன்கலந்த பகுத்தறிவில்லாவிடத்து என்ன பயனைத்தரப்போகின்றன?

"இல்லாளுக் கன்பில் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யும்—"

உண்ணும் உணவும், அணியும் ஆபரணமும், உடுக்கும் உடையும் மாத்திரம் ஒருகாலத்தும் ஒழுக்கமுடையாரென்று காட்டாது.

ஒழுக்கமே அவற்றினுக்கு அழகைத்தரும். இந்த உயர்ந்த அறிவுடைய ஸ்திரீரத்நமே உலகத்தில் எக்காரியத்திலும் பின்னடையாது கற்றவர் கோஷ்டிக்கு அலங்காரமாகவோ அலங்காரப்பெயருடையவளாகவோ விளங்குவாள். தீர விசாரியாது குருட்டுத்தனமாய் ஜாதி மதம் இவற்றில் நம்பிக்கைகொண்டு மற்றவரைவிரோதித்தால், ஒழுக்கங்கெட்டு அன்பழிந்து வம்சநாசத்தையும் தேசநாசத்தையும் தேடிக்கொடுக்கிறவர்களாகிறாள்.

ஆதலின், பெண்கல்வியென்பது, இருதயத்தை வளர்த்து நல்வழியில் திருப்பித்தன்னை யஜமானியென்றெண்ணாது யாவருக்கும் தானொரு வேலையாள்தான் என்று எண்ணந்தருவனவாகிய ஒழுக்கமும் அன்பும் கலந்ததாகவே இருக்கவேண்டுவதாம். இவர்களே வம்சம் தேசம் இவை செழிப்படையும்படி மழை பெய்யக்கூடிய மேகங்கள்.

நமது பூர்விகசாஸ்திரங்களும் சரித்திரங்களும் இப்படிப்பையே வற்புறுத்துகின்றன. எற்ப, அக்காலத்துப்பெண்மணிகளும் அவ்வாறு நடந்துள்ளார் என்று காட்டுகின்றன. சீதை, சாவித்திரி, தமயந்தி இவர்போன்ற ஸ்திரீகளுடைய சரித்திரங்களைப் படிக்கவேண்டுமென்றும் படிப்பிக்கவேண்டுமென்றும் நம் பெரியார் வற்புறுத்துகிறதும் இதன்பொருட்டல்லவோ? எச்சரித்திரத்தைப்படிப்பினும், ஒழுக்கமுடையவளால் வம்சத்தினுக்கும் தேசத்தினுக்கும் உயர்வும், அஃதில்லாதவரால் தாழ்வும் உண்டாயிருப்பதை நன்கு கவனிக்கலாம். ஆகையால் இவ்விஷயங்கட்கு ஏற்புடையதாகக்கற்பிப்பதே பெண்கல்வியாகும்.

M. Y. G. Rajam.

# நன்றியற்ற எஜமானன்.

## ஒரு இனிய நவீன கதை.

BY

V. இராமலிங்கம்.

## முதல் அத்தியாயம்.

மழை விடாமற் பெய்துகொண்டிருந்தது. சுந்தரம் தன்னுடைய எஜமானனையும் அவருடைய சாமான்களையும் வண்டியினின்றும் இறக்கிவிட்டு வண்டியைக் காடிகானுவில் விட்டுவிட்டுக்குதிரைகளுக்குக் கொள்முதலியதும்வைத்தபின், காடிகானுவிற்கருகில் தனக்கென்று விடப்பட்டிருந்த சிறுவீட்டில் நுழைந்தான். கதவண்டைகிடந்த கட்டிலின்மீது உட்கார்ந்தான். காலை 6-மணிக்கு வீட்டைவிட்ட எஜமானன் நிற்கவும் நேரமின்றிப்பற்பலவிடங்களிலும் திரிந்து தனக்கு வரவேண்டிய வட்டிகளையும், பாங்கியில் தனக்குச்சேரவேண்டிய லாபப்பகுதியையும், கணக்குப்போட்டுவாங்குவதிலும் கையெழுத்துபோடுவதிலுமே காலங்கழித்துப் பகலையோட்டிக்கதிரவன் மறையக் கால்மணிக்குமுன் கடற்கரைக்குக் காற்றுவாங்கப் போகவேண்டுமென்று வண்டியை அங்கே விடச்சொல்லிப் பின் சீட்டுக்கச்சேரியில் வெகுகாலங் கழித்துவிட்டபடியால் வீடுவந்துசேர மணி பத்துக்குமேலாய் விட்டது.

புறப்படுவதற்குமுன் வீட்டில் விலாப்புடைக்க ரொட்டியும் காப்பியும் மட்டில்லாது உண்ட எஜமானன், வீடுதிரும்புவதற்குள் எழிடத்தில் இறங்கியிறங்கி காப்பியும், டீயும், வெண்ணெய் ரொட்டியும், வேண்டுமட்டும் தானேயுண்டாரே யொழிய, தன்னுடன் கூட ஒரு ஆள் வண்டியோட்டி வந்து தனக்கென்று காத்துக் கொண்டிருக்கிறானென்பதை மறந்தே மறந்துபோனார். சிநேகிதர்கள்செலவில் வெட்டியாய்க் கிடைக்கும்போதெல்லாம் கெட்டியாய் இழுப்பார்.

"தனக்குமிஞ்சித்தானம்" என்ற தரும சாஸ்திரத்தினலோ, தன்னைப்போலப்பிறரைப் பாவிக்கவேண்டுமென்ற தனிமொழிக்கிணங்க தன்னைபோலவே தன் ஆளும் அடிக்கடி தின்று பசியற்றியிருக்கிருனென்ற தாராள எண்ணத்தாலோ, உலோபிகளுக்கும் கர்விகளுக்கும் காமிகளுக்கும் உலகமுழுவதும் தம்மயமாய் இருப்பதாகத் தோன்றுவதால்தன்சுகத்தை அவனிடத்தும் எதிர்பார்த்ததினலோ, மண்ணெடுக்கமாட்டாமல் சோக்கர் பிரம்படி பட்டபோது அவ்வடி பிரபஞ்சத்திலுள்ள ஜீவகோடிகளுக்கெல்லாம் ஏககாலத்தில் பட்டதுபோல இவ்வெஜமானன் வயிற்றில் காப்பியும் ரொட்டியும் கவிழும்போதெல்லாம் மற்ற ஜீவராசிகளுக்கும் அப்படியே விழுந்து கொண்டிருக்குமென்று அவர் எண்ணிவிட்டதினலோ, என்னவோ தன்னுடைய வண்டிக்காரன் பசியோடிருக்கிருனென்பதையும், தன்னினும் அவனுக்குப் பசி அதிகமிருக்கப் பலகாரணங்களிருக்கின்றனவென்பதையும் அவர் மறந்தும் எண்ணவில்லை.

என்றாலும் இதையெல்லாம் ஒரு குற்றமாகச்சுந்தரம் எடுத்துக்கொள்ளவில்லை. அவன் எப்போதும் போலவே தன் எஜமானனிடத்தில் எவ்வளவும் விசுவாசம் குறையாதவனாய்த்தன் முழுமனதையும் தன் எஜமானனுடைய நன்மைக்காகவே செலவிடத் துணிந்தவன். சுந்தரம் தன்னுடைய இருபத்து நாலாவது வயதுமுதல் இப்போது நாற்பத்திரண்டு வரையிலும் அவ்வெஜமானனிடத்திலேயே வெகு நம்பிக்கையோடும், நன்றியறிவோடும் உழைத்துவருகிருன்.

அன்றையதினம் முழுவதும் உணவென்பது கனவாயிருந்ததால் மிக்கக்களைப்படைந்து கட்டிலின்மீதே நித்திரை போய்விட்டான். சிறிதுநேரத்திற்கெல்லாம் அவனுடைய ஏழு குழந்தைகளில் மூத்தவளாகிய ஜானகி தந்தையைத்தட்டியெழுப்பி அன்றுகாலையில் ஆக்கப்பட்டிருந்த களியை நன்ருய்க்கரைத்து இரண்டு மூன்று லோட்டா கொடுத்தாள். உண்டவுடன் கொண்டகளை சற்றுமாறிச் சிறிது சந்தோஷமாய்த்தன் குழந்தையோடு பேசிக்கொண்டிருந்தான். என்றாலும், ஒரு மூலையில் தன்மனைவி, சென்ற மூன்று மாதகாலமாய்க் காயலாவாய்க்கிடப்பதும், தன்னுடைய மற்ற குழந்தை

கள் ஆதரிக்கவும் ஆளின்றி திக்காலுக்கொன்றாய் அச்சிறு வீட்டில் புரண்டுகிடந்து நித்திரை செய்வதும், அவன்மனதை உருக்கியது. கந்தைசுற்றிய கட்டைகளெனத் தன் சொந்தக்குழந்தைகள் சிந்திக் கிடந்தது அவனைச் சிந்தைநோகச்செய்தது விந்தையன்று. தன்னையும், தன்மனைவியையும், தன் ஏழுகுழந்தைகளையும், தன் தரித்திரத்தையும் அக்கட்டிலின்மீது படுத்து எண்ணிக்கொண்டே கண்ணயர்ந்தான்.

ஜாமத்துக்கெல்லாம் யாரோ கதவிடித்ததுபோல் சத்தங்கேட்டது. சுந்தரம் திடுக்கிட்டெழுந்து கட்டிலின்மீது உட்கார்ந்து, யாரது! யாரது! என்று கூவினான். பதிலில்லை. ஆறைற்கொஞ்சநேரத்திற்கெல்லாம் மறுபடியும் கதவிடித்த சத்தங்கேட்டது. கதவைத் திறந்தான். இருட்டு. இன்னும் மழை தூறிக்கொண்டிருந்தது. சற்றுநேரம் உற்றுப்பார்த்தான். ஏதோ ஒரு உயர்ந்த உருவம் வாசலுக்கருகில் நகர்ந்தது, அவன் கண்ணுக்குத்தெரிந்தது. பத்துகஜ தூரத்தில் இன்னும் சில ஆட்கள் நின்றுகொண்டிருந்ததும் சுந்தரத்திற்குத்தெரிந்தது.

சுந்தரம்—யாரது?

உருவம்—யாருமில்லை, நான்தான்.

சுந்தரம்—யார் ராமனா?

உருவம்—அல்ல, முத்து.

சுந்தரம்—முத்து! என்னவிசேஷம்? என்ன இந்நேரத்தில் வந்தது?

முத்து—ஒன்றுமில்லை. உன்னால் ஒரு பெரிய உபகாரம் ஆகவேண்டும்.

சுந்தரம்—என்ன? கூடுமானால் தடையில்லை.

முத்து—என்னவா * * * உனக்கேதெரியுமே.

சுந்தரம்—இல்லையே. நீ இதுவரையில் என்னிடத்தில் ஒன்றும்வேண்டினதில்லையே.

முத்து—நான் வேண்டினதில்லை. ஆனால், கிருஷ்ணன் உன்னிடத்தில் நேற்றை மத்தியானம் ஒரு சமாச்சாரம் சொல்லவில்லையா?

சுந்தரம்—ஆமாம். அது—அது—அதைப்பற்றி உனக்கென்ன?

முத்து—ஏன்? அவன் சொன்ன பிரகாரம் செய்வதில் என்ன தடை? காலத்துக்குத்தக்கபடியல்லவா வேஷம் போடவேண்டும்? இவனுக்கு அப்படித்தான், சுந்தரம், செய்யவேண்டும். நீ சொன்னதும் என்னவோ வாஸ்தவந்தான். ஆனால் இவனிடத்தில் அந்தத்தருமம் பார்க்கவே கூடாது. உன்விஷயத்திலேயே அவன் இவ்வளவு கண்டிப்பாயிருக்கிறானே! நீ அவனுக்காக இவ்வளவு பாடுபடுகிறாயென்று கொஞ்சமாவது எண்ணிப்பார்க்கிறானா? படுபாவி! உன் தரித்திரத்தையும் எண்ணிப்பார்ப்பானா? அவனுக்காக நீ இவ்வளவும் பார்ப்பதேன்? எது எப்படிபோனாலும் சரி. நீ ஆயிரம் ரூபாய் வாங்கிக்கொள். இல்லாவிட்டால் கிடைப்பதில் மூன்றிலொருபங்கு உன்னுடையது. மிகுதியை நாங்களெல்லாரும் பார்த்துக்கொள்ளுகிறோம். சரிதானா? இன்னுமென்ன?

சுந்தரம்—முத்து! நான் பணத்தைக்கவனித்தவனல்ல. நீயும் இந்த வழிக்குத்திரும்பியது ஆச்சரியமாயிருக்கிறது.

முத்து—மெள்ளப்பேசு. கத்தாதே. என்ன செய்வது சுந்தரம்? பஞ்சகாலத்தில் எவ்வளவு பாடுபட்டாலும் வயிற்றிற்கே கட்டுவதில்லை. என்னசொல்லுகிறாய்? சீக்கிரம், நேரமாகிறது. இன்றையதினம் எப்படியாவது காரியத்தை முடித்துவிடவேண்டும். அதற்கு நீயன்றி ஆகாது. தயவுசெய்யேன். தயவுசெய்யேன்.

சுந்தரம்—முத்து! என் மனச்சாட்சிக்கு முற்றும் மாறாகவிருக்கின்றது. இவ்விஷயத்தில் நீதலையிடவேண்டாம். என்வார்த்தையைக்கேள்.

முத்து—அந்த வேதமெல்லாம் படிக்கவேண்டாம். இப்போதென்ன சொல்லுகிறாய்? எனக்காகவாவது செய்யேன். என் கஷ்டங்கள் உனக்கேதெரியும். என்குடிப்பிறப்பும் கௌரவமும் நீயறியாததல்ல. நானே இதைச்செய்யத் துணிந்தேன். உனக்கென்ன? இதிலென்னபாபம். மயிலே மயிலே! என்றால் இறகு கொடுக்குமா? தண்டுமுண்டுக்காரனுக்கே தயிருஞ்சோறும்.

சுந்தரம்—ஆமாமாம். பேஷ்! அதற்கென்னை யென்செய்யச்சொல்லு கிறாய்?

முத்து—மெள்ளப்பேசு. சுந்தரம்! என்ன இப்படிக்கத்துகிறாய்? நீ செய்யவேண்டிய வேலையெல்லாம் வெகு சுலபமான வேலை தான். இன்றைக்காவது நாளைக்காவது இருட்டு தாண்டுவதற் குள் நீ உன் எஜமானனுடைய பங்களாவின் பின்கதவைத்திறந் துவைத்துவிடவேண்டும். அதற்குமுன் வீட்டிலுள்ள விளக்கு களையெல்லாம் அணைத்துவிடவேண்டும். அதோடு தண்டவா ளப்பெட்டிகளின் சாவிகள் இருக்குமிடம் இன்னதென்று சொல்லிவிட்டாற்போதும். மற்றக்காரியங்கள் எங்களைச்சேர்ந் தன. அப்புறம் நீ அங்கே தங்கவும்வேண்டுவதில்லை. உன்னை உயிருள்ளளவும் காட்டிக்கொடுக்கமாட்டோமென்று உறுதி யாய் நம்பு. உன் பங்கை உடனே கொடுத்துவிடுகிறோம். இல்லாவிட்டால் இந்த 200-ரூபாயை முன்பணமாக வைத்துக் கொள். மீதி எண்ணூறு ரூபாய் நாளையதினம் 10-மணிக்குள் தருகிறேன். அதன்பிறகு வேண்டுமானால் நீ நான் சொன்ன தைச்செய்.

என்று இரண்டுநூறுரூபாய் நோட்டைத் தன்சட்டைப்பையினின் றும் எடுத்து நீட்டினான். கதவோரத்தில் எரிந்துகொண்டிருந்த ஒரு சிறு விளக்கின் வெளிச்சத்தில் நீட்டிச்சுந்தரத்திற்கு ஆசை யுண்டாக்க அவைகளைத்திருப்பித்திருப்பிக்காட்டினான்.

சுந்தரம்—முத்து! இனி அதுவிஷயமாய் என்னிடத்தில் ஒன்றும் பேசவேண்டாம். எவ்விதத்திலும் உன்னோடு இணங்கமுடி யாது. (என்றுசரேலென்று வீட்டுக்குட்சென்று தாளிட்டான்.)

சுந்தரத்தின் எஜமானன் சென்னையிலுள்ள செல்வர்களில் முதன்மையானவருக்குள் ஒருவர். அநேக லக்ஷக்கணக்கான ஆஸ்தி யுடையவர். வியாபாரத்திலும் லேவாதேவியிலும் பேர்போனவர். கப்பல் வியாபாரத்தில் கைதேர்ந்தவர். வியாபாரத்தில் கணக்குமித இல்லா லாபமும், லேவாதேவியில் முதலுக்கு வட்டியும், வட்டிக்குக்

குட்டியுமாய அவர் செல்வம் வளர்ந்துவந்தது. அரைக்காசுகூடப் பிறருக்குக் கொடுப்பதென்றால் பிராணுபத்து. ஏழைப்பையன்கள் கல்வி, பொதுச்சத்திரங்கட்டல், கைத்தொழில் விருத்தி, நாஷனல் பண்டு முதலிய பொதுநன்மைக்காகப் பாடுபடுபவர்கள் உண்டிகை தூக்கிக்கொண்டுவந்தால் காலணு அல்லது அரையணுவுக்குமேல் கழுத்தறுத்தாலும் போடமாட்டார். அவ்வளவு பணமிருந்தும் ஜனங்கள் எவ்வளவும் மதிப்பதில்லை. ஆனல் தன் வயிற்றிற்குக் கொட்டிக்கொள்வதில் வெகு கெட்டிக்காரர். அதுவும் இலவசமாய்க் கிடைக்கும்போது கணக்கென்பதேயில்லை. அசைபோடும் மிருகம் போல், வாய் எந்நேரமும் ஆடிக்கொண்டே யிருக்கவேண்டும். வெகு கஷ்டத்தோடு ஒரு இரட்டைக்குதிரை வண்டியும் அதற்கொரு ஆளும் வைத்திருக்கிறர். சுந்தரம் வெகுகாலமாக நம்பிக்கையோடு உழைப்பவனுனதால், அவனிடத்தில்மட்டும் வெகு தாராளம் போல் மாதம்மாதம் எட்டு முழுரூபாய் மனதோடு கொடுத்துவிடுவார். அவரிடத்தில் சுந்தரம் அனுபவிப்பதெல்லாம் அந்த எட்டு பொட்டைக்காசுதான்.

ஆனல் அவருடையமனைவி ஸரஸ்வதியம்மாளும் மகன் மாணிக்கமும் சுந்தரத்தினிடம் வெகுபக்ஷமாய் அவனுக்குக் கஷ்டம்நேர்ந்தபோதெல்லாம் ஐயாவுக்குத்தெரியாமல் தாராளமாய் உதவி புரிந்து ஆதரித்து வந்தார்கள். அதனுல்தான் சுந்தரம், தன்னோடு ஒன்பது ஜீவர்களுக்கு உப்புக்கஞ்சியாகிலும் ஊற்றிவந்தான்.

முத்துவுக்கும் அவனுடன் வந்திருந்த இன்னுஞ் சிலருக்கும் சுந்தரத்தினுடைய எஜமானுகிய குமாரசாமி செட்டியாருடைய வீட்டிற்கொள்ளையடித்து, வெளியேவர வழிதெரியாமல் விழித்துக் கொண்டிருக்கும் பணப்பைகளுக்கு விமோசனம் செய்யவேண்டுமென்ற எண்ணம் வெகு நாளாகவுண்டு. குமாரசாமி செட்டி எல்லா லோபிகளையும்போல வெகு ஜாக்கிரதைக்காரனுனதால் தக்க சமயம் கிடைக்கவில்லை.

தொடரும்.

# பெண்கள் பக்கம்.

## 1. வேதவதி.

உலகத்தில் தீங்கெல்லாம் உருவாகக்கொண்டு பிறந்தவனான இலங்காதிபன் இராவணனுடைய பெயர், இந்த லோகமித்ரனைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் ஞாபகத்திற்கு வாலாகும்.

அவன், தனது கொடுங்கோன்மையால், எல்லாவுலகத்தையும் கலங்கும்படியாகச்செய்துகொண்டிருந்தான். அப்போது அவனுக்கு சமபலத்தையுடையவர்களான அரசர்பலரும், தபோபலத்தையுடைய ரிஷிகள் பலருங்கூட அவனுடைய கொடுங்கோலுக்குப் பயந்திருந்தார்களென்றால் மற்றவரைச் சொல்லவேண்டுமா?

இவன் இப்படியிருப்பதைக்கேட்டுச் சகியாதவனான இவன் தமையன் குபோன், இவனுக்குப் பலவாறாகத் தகுந்த புத்திகள் சொல்லினன். அந்த உபதேசங்களையெல்லாம் தனக்கு நிந்தையும் அவதூறுமாகக்கொண்டு இராவணன், அக்குபோனை இலங்கையை விட்டு ஒட்டியும், அளகாபுரியில் சென்று சைத்திரரதம் என்று சொல்லப்படும் நந்தனவனத்தையும் புஷ்பகம் என்று சொல்லப்படும் விமானத்தையும் குபோனிடமிருந்து அபகரித்துக்கொண்டும் திரும்பினான்.

திரும்பும்போது, ஈசனுடைய கைலாசகிரியின் சமீபத்தில் பனி நிறைந்துள்ள ஓர் அழகான இடத்திற்கு வந்துசேர்ந்து, அந்த இடத்தின் இயற்கையான அழகைக்கண்டு, அவ்விடத்தைவிட்டுப்போக மனமில்லாதவனாக நின்றான்.

நின்றவன், அங்கே பலவித மணமுள்ள புஷ்பக்கொடிகளாலும் செடிகளாலும் சூழ்ப்பட்டு மிகவும் ரமணீயமாகவிருந்த ஒரு பர்ணசாலையைக்கண்டான். அந்தச்சாலையில், இயற்கையாகவே உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் நிறைந்திருந்தாலும், தனியாகக் குடித்

தனம் பண்ணவேண்டுமென்று ஆசைப்படும் ஒருவருக்குவேண்டிய செயற்கைப் பொருள்களும் நிறைந்திருந்தன.

இவற்றைக் கவனித்துச்சென்ற இராவணன், திறந்த வீட்டில் நுழையும் அதைப்போல, யாதொன்றும் ஆலோசியாமல் உள்ளே சென்றான். அங்கே, அழகே உருவெடுத்துவந்தது போன்றுள்ள ஒரு பெண்மணியைக் கண்டான். ஆபரணங்களாலும், நல்ல ஆடைகளாலும் அந்த ஸ்திரீரத்னம் அலங்கரிக்கப்படாதவளாயிருந்தாலும் கண்டார் யாவரும் மயங்கும்படியான காட்சியோடிருந்ததால், இயற்கையிலேயே துஷ்டனான இராவணனுடைய மனதிருந்ததைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

அந்தச் சுந்தரவதனியும், இதுவரையும் அன்னியரைக் கண்ணாலும் கண்டதில்லை யானதால், தான் முதலில், வந்தவனை யாரென்று கேட்பதற்கும் நாணித்தயங்கி நின்றாள்.

இராவணனோ, மரியாதையைக்கவனியாதவனாதலால், அவளைப் பார்த்து ஒரு புன்னகைபுரிந்து, கிட்டிப்போய், ஆச்சரியமான சில வார்த்தைகளைச் சொல்லலுற்றான். “ஓ! காமக்கொடியே!! அழகினுக்கழகே!!! நீ யார்? உலகத்தில் ஒப்பில்லாத உன் அழகைக் கொஞ்சமேனும் லக்ஷ்யஞ்செய்யாமல், இங்குத்தனியே ஏன் இருக்கிறாய்? நிர்மானுஷ்யமான இந்த இடத்திற்கும் அமானுஷ்யமான உன் அழகுக்கும் ஆலோசித்துப்பார்த்தால் கொஞ்சமேனும் பொருத்தமேயில்லை. நீ இவ்விடத்தைவிட்டு ஒரு அரண்மனையி லிருந்தால், அவ்வரண்மனை எவ்வளவு அலங்காரமாகவிருந்திருக்கும் என்று ஆலோசித்துப்பார். வீட்டு வேலைக்குத் தளர்ந்தவர்களும் வயது சென்ற கிழவிகளும் உலகசுகத்தையனுபவித்து ஒழித்தவர்களுமான ஸ்திரீகளல்லவா தபஸ்வினி வேஷத்தோடு இந்தக்காட்டில் தனித்திருக்கவேண்டும்? அப்படியே உனக்கொப்பென்று இந்த இடத்தை நீ தேடிக்கொண்டிருக்கிறாயானாலும், தனியேயிருந்து தபசுசெய்யத் தக்க வயதும் உனக்கு வாவில்லை. தேகமும் அப்படி அமையவில்லை” என்று பிதற்றினான்.

இவைகளுக்கு, நன்றாய்ச் செவிகொடாத அந்த இளங்கொடியாள், எழுந்திருந்து, வந்தவருக்கு அர்க்ய பாத்யங்கொடுத்து உட்காரச்செய்துத் தன் வரலாற்றைச் சொல்லவாரம்பித்தாள். "நான், பிருஹஸ்பதி குமாரரான குசத்வஜருடைய மகள். என் தகப்பனர் வேதம்படித்துக்கொண்டிருந்த காலத்தில் நான் பிறந்தேன். எனக்குத்தக்க வயதில் சாஸ்திரங்களை என்பிதா சொல்லிக்கொடுத்தார். என் சிறுபோதுமுதல், நான் வேதத்திலேயே மிகுதியாக என் புத்தியைச் செலுத்தியிருந்ததால், அவர் எனக்கு வேதவதி என்னும் பெயரளித்தார். எனக்குத்தகுதியான யவ்வன வயது வந்தவுடன், ராஜ குமாரர் அநேகர் எனக்கு மாலையிட விரும்பிவந்தார்களானலும், என்பிதா, ஞான திருஷ்டியால் எனக்கு இனியுண்டாவதையுணர்ந்து, ஒருவருக்காகிலும் என்னைக்கொடுக்க இஷ்டமில்லாமல் மறுத்துவிட்டார். அதனல், வந்தவரெல்லாம் மனத்தளர்ச்சியோடு யாதொன்றும் சொல்லமுடியாமல் போய்விட்டார்கள். ஆனல், தைத்திய அரசனன சம்பன் என்பவன், மிகுந்த கோபங்கொண்டு, ஒரு நாளிரவில் என் தகப்பனர் தூங்கிக்கொண்டிருக்கும்போது, மெதுவாக அவருடைய படுக்கையறைக்குச்சென்று, அவரைக் கொன்றுவிட்டான். பதிவிரதாசிரோமணியான எனது தாய் மனம் பொருதவளாக உடன்கட்டையேறிவிட்டாள். ரட்சிப்பாரில்லாமல் அநாதையாக நான் விடப்பட்டவளானலும், என்பிதாவின் அபிப்பிராயத்துக்கும் என் அதிர்ஷ்டத்துக்கும் மாறுபடாமல், நான், பிரம்மசாரிணியாகவே இருக்கத்துணிந்து, உலகத்தைத்துறந்து, இவ்விடத்துக்கு வந்து, உலகுக்கொரு நாதனன நாராயணமூர்த்தியையே பக்தியால் நினைந்து, காலத்தை நன்ருகக் கழித்துக்கொண்டிருக்கிறேன். உன்னையும், உன் சரிதங்களையும் நீ சொல்லாவிட்டாலும் நான் அறிந்திருக்கிறேன்" என்று சொன்னள்.

அவள் வார்த்தையில் ஆச்சரியங்கொண்ட மரியாதையில்லாத தசமுகன் "பெண்ணுலகத்துக்கே கிடைக்கப்பெருத அழகை ஒரு லக்ஷ்யமாகக்கொள்ளாது, யாரும் விரும்பாத உன் தபஸைப்பற்றிப்

பெருமையாகச் சொல்லுகிறாய். ஏ! மான்விழியாளே! லோகமெல்லாம் சுற்றியிருக்கிற நானும் உன்தேகத்தின் அமைப்பைப்போல் இதுவரையில் பார்த்தேனில்லை. இவ்விதமான அழகுடைய தேஹத்தைக் கொஞ்சமேனும் கவுரவப்படுத்தாத உன்னெஞ்சைப் பிரமன் கல்லால் செய்தானோ இரும்பால் செய்தானோ? போனதுபோகட்டும். உன் வீம்பெல்லாம் இருக்கட்டும். உன் பிதாவின் வார்த்தையை இதுவரையில் காப்டாற்றினதே மேலாகட்டும். எதிரொருவருமில்லாதவனான பிரதாபலங்கேசுவரன் நான் உன்னை மிகவும் வருந்திக்கேட்டுக் கொள்கிறேனாதலால். இனிமேலாகிலும் எனக்கென்று என் குலமுதல்வனாகிய பிரமன் படைத்திருக்கும் இந்தத்தேஹத்தை அலசாமல், என்னோடு என் தேசத்துக்குவந்து, தேவராலும் மும்மூர்த்திகளாலும் அடையமுடியாத எனது பாக்கியமெல்லாவற்றையும் நீயே ஏற்றுக்கொண்டு, உனக்கென்று பிரமன் உண்டுபண்ணியிருக்கும் என் தேகத்தையும் அந்தத்தேசத்தையும் மூன்று லோகத்தையும் அளவில்லாத மகிழ்ச்சியோடு ஆளப்பெறுவாய். உன் அழகால் மயக்கங்கொண்டு உனக்கு அடிமையாகிவிட்டேன். நீ செய்யும் தபசு பயனற்றது. காணப்பெறாதொன்றைக் கடவுளெனவைத்து அதைக் காணுவோமென்று காயத்தைக் கிலேசிக்கச்செய்வது கண்கெட்டார் காரியமல்லவா? ஆகையால், காமக்கிளியே! என் கனிரசமே!! எழுந்திரு. விமானத்தில் ஏறிக்கொள்." என்று மன்றாடினான்.

வேதவதி மிகுந்த கோபத்தோடு அவன் பக்கமாகத்திரும்பிச் சொல்லுகிறாள். "பேயே உலகமெல்லாம் யார் இருப்பதால் நிலைத்திருக்கின்றனவோ அவ்வரியபெரிய கடவுளை, உங்கள்வேதம் அறிவுறுத்துங்கடவுளைக் காணமுடியாதவரென்று கழித்துப்பேசுகிறாயே. நீ உண்மையின்னதென்றறியாத மூடனாயிருந்தும், உலகம் உன்னைப் படித்தவனென்று ஏன்தான் சொல்லுகிறதோ? உன்னுடைய கொடுங்கோன்மைக்குப்பயந்துதான் உலகமும் அப்படிச்சொல்லுகிறதென்று எண்ணுகிறேன். இனிமேலாவது, அறியாமையினால் மறந்தாகிலும் கடவுளின் உண்மையை மறுக்காதே. அவர் இட்ட சட்டத்தை

வெறுக்காதே. உன் வாணளை வீணளில் குறுக்காதே. செல்வத்திற்சிறந்தோமென்று செருக்காதே. காமத்தில் உன் கட்டையைக் கருக்காதே. கற்பினரைக் காதலித்து உள்ளம் உருக்காதே. அழிந்ததெல்லாம் போதும். அழித்ததெல்லாம் சாலும். குலதனத்தைத் தேடு. குலதெய்வத்தைநாடு. நிஷ்டையிலிரு. கட்டையைவெறு. நானோ, என் உடல் பொருள் ஆவி மூன்றையும் அக்கடவுளுக்கேயளித்துவிட்டேன். நான் அவருடைய பக்தியென்னும் சமுத்திரத்தில் மூழ்கி அவரையே எங்கும் காண்கிறேன். எதுவந்தாலும் அதற்குப் பயப்படேன். அவருடைய பக்தியொன்றைத்தவிர பிரபஞ்சத்தில் யாதொன்றும் என்னை ஆட்படுத்திக்கொள்ளச் சக்தி பெற்றிருக்கவில்லையென்று உறுதியாய்ச்சொல்லுகிறேன்" என்றாள்.

அந்தத்தபஸ்வினியுடைய உறுதியைக்கவனித்த கல்நெஞ்சனான அக்கடையன், காமத்தால் கண்ணிழந்து வேதவதியின் கோதைபோன்ற கூந்தலைப்பிடித்திழுத்தான். ஆனல் அப்பெண்மணி துள்ளிப்பாய்ந்து அப்புறம் விலகிப்போய், பாபிகைப்பட்ட இக்கூந்தலைத் தரித்திருக்கப்படாதென்று ஒரு கத்தியாலதனைக் கத்தரித்தெறிந்துவிட்டு, ராவணனைப்பார்த்து, "தீயவனே! உனக்குநன்னடத்தையென்பதே யின்னும் பழக்கத்துக்குவரவில்லை. தான் அறிந்திராத மற்றொரு பெண்ணோடு எவனும் இப்படிப்பேசவும் துணியமாட்டான். நீ நீதியைத்துறந்த நீசன். நீசன் தொட்ட சரீரத்தை யினி வைத்திருக்கமாட்டேன். இக்கத்தியால் உன் மார்பைப் பிளப்பேன். ஆனல், சாஸ்திரம் எனக்கு இடங்கொடுத்துப்பேசவில்லை. மேலும், நான் தபஸ்வினியாதலால் உன்னைச்சபிக்கவும் கூடாது. ஆனதால் இப்போது இதே அக்கினியில் விழுந்து நீ தொட்ட என் தேகத்தை எரித்துவிட்டு, மற்றொரு ஸ்திரீதேஹத்தை எடுத்து வளர்ந்து, உனக்கு முடிவைத்தேடமுயல்வேன். நான் இதுவரையில் அக்கினிஹோத்திரத்தைச் செய்துவந்ததும், ஒரு ரிஷிக்குக் குமாரத்தியானதும், வைதிக உண்மைகளை நன்றாய்த்தெரிந்திருப்பதும் உண்மையானல் நான் சொன்னவையெல்லாம் பலிக்கட்டும்" என்று சொல்லி அக்கினியில் பிரவேசித்துவிட்டாள்.

| | குளிகை. மணி | ராகு. மணி | எமகண்டம். மணி | வாரசூலை. காலம் மணி | திக்கு | பரிகாரம். |
|---|---|---|---|---|---|---|
| | 3—4½ | 4½—6 | 12—1½ | 10¾–12¼ | மேற்கு வடமேற்கு. | வெல்லம். |
| ...ள். | 1½—3 | 7½—9 | 10½–12 | 9¼–10¾ | கிழக்கு தென்மேற்கு | தயிர். |
| ...செவ்வாய். | 12—1½ | 3—4½ | 9—10½ | 12⅜—2 | வடக்கு வடமேற்கு | பால். |
| ...தன். | 10½–12 | 12—1½ | 7½—9 | 12⅜—2 | வடக்கு வடகிழக்கு | பால். |
| ...வியாழன். | 9—10½ | 1½—3 | 6—7½ | 2—3½ | தெற்கு தென்கிழக்கு | தைலம். |
| ...வெள்ளி. | 7½—9 | 10½–12 | 3—4½ | 10¾–12¼ | மேற்கு தென்மேற்கு | வெல்லம். |
| ...னி. | 6—7½ | 9—10½ | 1½—3 | 9½–10¾ | கிழக்கு தென்கிழக்கு | தயிர். |

1015/83

# வாரம் காட்டும் காலண்டர்.

## 1913.

| 28 | 31 | 30 | 31 | 30 | | | | | | 31 | 31 | 30 | 31 | 30 | 31 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிப்ரவரி. | மார்ச்சு. | எப்ரல். | மே. | ஜூன். | | | | | | ஜூலை. | ஆகஸ்டு. | செப்டம்பர். | அக்டோபர். | நவம்பர். | டிசம்பர். |
| ச | ச | செ | வி | ஞா | 1 | 8 | 15 | 22 | 29 | செ | வெ | தி | பு | ச | தி |
| ஞா | ஞா | பு | வெ | தி | 2 | 9 | 16 | 23 | 30 | பு | ச | செ | வி | ஞா | செ |
| தி | தி | வி | ச | செ | 3 | 10 | 17 | 24 | 31 | வி | ஞா | பு | வெ | தி | பு |
| செ | செ | வெ | ஞா | பு | 4 | 11 | 18 | 25 | ✱ | வெ | தி | வி | ச | செ | வி |
| பு | பு | ச | தி | வி | 5 | 12 | 19 | 26 | ✱ | ச | செ | வெ | ஞா | பு | வெ |
| | வி | ஞா | செ | வெ | 6 | 13 | 20 | 27 | ✱ | ஞா | பு | ச | தி | வி | ச |
| | வெ | தி | பு | ச | 7 | 4 | 21 | 28 | ✱ | தி | வி | ஞா | செ | வெ | ஞா |

இது நாகரிகமான காலமென்றும் நாகரிகத்தை மற்றைநாட்டார்களுக்குக்கற்பிக்கும் உபாத்தியாயர்களென்றும் பேர்வகித்து டாம்டாம் போடும் வல்லரசுகளைத்துருக்கி, சண்டைக்கு இடங்கொடாமல் நிறுத்தும்படியும் கேவலம் நியாயத்தைமட்டும் செய்யவேண்டும் என்றும் பன்முறை வற்புறுத்தியும், சண்டையைத்தடுக்க முயலாமல் "துருக்கியே ஐரோப்பாகண்டத்தில் இருக்கக்கூடாது. ஐரோப்பாப்படம் பார்ப்பதற்கு கிருஸ்தவப்படமாகவே இருக்கவேண்டு"மென்ற மாறான எண்ணத்தினால் "பொதுநோக்காய்இருப்பதே வல்லரசுகளின் நல்லெண்ணம்" என்று சொல்லிவிட்டன. சண்டையில் துருக்கியர்களும் வீரர்கள் என்று தெரிந்ததும், சமாதான உபதேசம் துருக்கிக்குச்செய்ய ஆரம்பித்துவிட்டன. அப்படிச்சமாதானத்திலும் துருக்கியர்களுக்கு இரண்டுகண்களில் ஒன்றாய்இருக்கும் "அதிரியானோபிலை பால்கனுக்குக் கொடுத்தேதீரவேண்டும். இல்லையேல் எங்கள் மனவருத்தத்திற்கு உள்ளாகவேண்டும்" என்று வல்லரசுகள் பயமுறுத்துகின்றன.

ப[illegible]ருக்கியர்களுக்கு அவமானம் வரும்படியான சமாதானம் சரி ந[illegible]. யாருக்குத்தான் சரியாகும்? துருக்கி சுல்தான் ஒருகால் ர[illegible]னம் என்றுசொன்னாலும், ஜனங்களும் படைவீரர்களும் துரு[illegible]ன் பெருமையை முன்னிருந்ததைக்காட்டிலும் அதிகப்படுத்த[illegible]லும்போது, அகவுரவமான சமாதானத்திற்கு இணங்குவார்கள் என்று எப்படிச்சொல்லக்கூடும்? லண்டனில் ஒருமாதகாலமாய்ப்பேசின சமாதானம் ஒன்றும் பலிக்காது என்று சொல்லும் நிலைமையில் உள்ளது. சீக்கிரத்தில் சண்டையே ஆரம்பிக்கும்போலிருக்கிறது. "வலிமையே கெலிப்பு" என்ற கொள்கைதான் மேனாட்டு நாகரிகம். இதற்குத்தான் இவர்கள் உபாத்தியாயர்கள் போலும்!

M. C. S.




## வினோதக்கணக்குகள்.

ஒரு எஜமானன் படத்திற் காட்டியபடி பணப்பெட்டியில் ரூபாயை வைத்துவிட்டுத்தினந்தோறும் எ முதல் பி வரையிலும், பி முதல் சி வரையிலும், சி முதல் டி வரையிலும், டி முதல் எ வரையிலும், எண்ணிப்பார்த்து ஒவ்வொன்றும் 21 ஆகவே சமாதானத்தோடு போவது வழக்கம். அவனுடைய வேலையாள் இதனையறிந்து எஜமானனுக்குத் தெரியாமல் தினத்துக்கு நான்குரூபாய்களாக மூன்றுநாட்களில் திருடிக்கொண்டுவிட்டான். என்றாலும் எஜமானன் வந்து கூட்டிப் பார்க்கும்போது அந்த 21 தவறாமல் வந்துக்கொண்டிருந்தது. என்றால், அந்தவேலையாள் ஒவ்வொரு நாளும் வைத்தஒழுங்குஎப்படி?

---

ஒரு வியாபாரி ஒரு கடைக்குப்போய் 20ரூபாய்க்குச் சாமான்களை வாங்கிக்கொண்டுக்கடைக்காரனிடம் 50 ரூ நோட்டொன்று கொடுத்தான். கடைக்காரனிடத்தில் சில்லரையில்லாததனால், அடுத்த கடையில் மாற்றி மீதியை வியாபாரிக்குக் கொடுத்துவிட்டான். வியாபாரி போன கொஞ்ச நேரத்துக்கெல்லாம், அடுத்த கடைக்காரன் அந்நோட்டுப்பொய் நோட்டென்று இந்தக்கடைக்காரனிடங்கொண்டு வந்தான். நோட் பொய்நோட்டானதால் முதற்கடைக்காரன் தன் சிநேகிதரிடம் 50 ரூ கடன்வாங்கி அடுத்தகடைக்காரனுக்குக் கொடுத்தான். சாமான்களினுடைய அசல் விலை 15 ரூ ஆனால், முதல் கடைக்காரனுடைய கைநஷ்டமென்ன?

---

ஒரு தோட்டத்தில் 10 மரங்களை 5 வரிசைகளாகவும், வரிசை ஒன்றுக்கு 3 மரங்களாகவும் எப்படி ஒழுங்குபடுத்திவைப்பது?